அமெரிக்கா

சில உண்மைகள்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

இளைஞர் தமிழ்ச் சங்கம்
பாகனேரி.
11·8·52

அமெரிக்காவைப்பற்றிய உண்மைகள்

தமிழாக்கம் (D. தோத்தாதிரி)

Published by Higginbothams Ltd. and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

உள்ளடக்கம்

நாடும் மக்களும்	5
ராஜ்ய பரிபாலனம், அல்லது அரசாங்க அமைப்பு முறை	9
மத்ய அரசாங்கத்தின் அமைப்பு முறை	13
வாழ்க்கைத்தரம்	22
சுகாதாரமும் வைத்தியப் பாதுகாப்பும்	24
கல்வி	26
சமூகப் பாதுகாப்பு	28
தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும்	34
ஸ்திரீகள்	37
மதம்	41
சங்கீதம், நூல்கள், கலை, கலைக்கூடம்	44
பொழுதுபோக்கு	47
தொழில் உற்பத்திகள்	51
செய்திஸ்தாபனம்	52
மின்சார சக்தி	54
போக்கு-வரத்து சாதனங்கள்	56
விவசாயம்	58
காடுகளும் அதன் உற்பத்திகளும்	61
சுரங்கப் பொருள்கள்	63
வியாபாரக் கப்பல்களும் அயல் நாட்டு வியாபாரமும் ..	64
அரசாங்க வருமானம்	66
முக்கியமான நாட் குறிப்புகள்	69



விஞ்ஞானத் துறையில் புதியன பல கண்டுபிடித்துப் புகழ்பெற்ற அமெரிக்கர் தாமஸ் ஆல்வா எடிசன்.



மாசச்சூசெட்ஸ் தொழில் நுட்பக் கல்லூரி அமெரிக்காவிலுள்ள தொழில் துறைக் கல்வி நிலையங்களிலெல்லாம் சிறந்ததொன்றுகும். 1949-ல் அமெரிக்காவுக்கு விஜயஞ் செய்த பிரதமர் நேரு அக்கல்லூரியையும் போய்ப்பார்த்தார்.

அமெரிக்க பாடசாலை ஒன்றின் வகுப்பறை.

நாடும் மக்களும்

அமெரிக்க நாடுகள் 30,22,387 சதுர மைல்கள் பரப்புக் கொண்ட ஒரு நாடாகும். இந்நாடு, வட அமெரிக்க கண்டத்தின் உஷ்ணக் காடுகளுள் 3,000 மைல்கள் பரவி, கிழக்கில் அட்லாண்டிக் சமுத்திரத்தையும் மேற்கில் பஸிபிக் சமுத்திரத்தையும் கொண்டு அமைந்துள்ளது. இந்நாட்டின் வட எல்லையாக கனடாவும், தென் எல்லையாக மெக்ஸிகோவும் அமைந்திருக்கிறது.

இந்நாடு 48 சிறிய பிரதேசங்களைக் கொண்டது. அவைகளில் எல்லாவற்றையும் விட பெரியதான டெக்ஸாஸ், மொத்தப் பரப்பில் பத்து சத விகிதத்தைக் கொண்டு, பிரான்ஸ் தேசத்தை விட பெரிதாக இருக்கிறது.

கிழக்கு அமெரிக்காவில் அமைந்துள்ள அப்பலாச்சியன் மலைகள் 7,000 அடி உயரத்தில் தென் வடலாக இருக்கிறது. மிஸிஸிபி நதியின் வளமும் செழிப்பும் நிறைந்த பள்ளத் தாக்குகள் அப்பலாச்சியன் மலைகளின் மேல்புறம், ஆயிரம் சதுர மைல்கள் பரவிக் கிடக்கின்றன. இச் செழிப்பான பூமியின் மேற்கில், வட அமெரிக்காவிலேயே மிகவும் உயர்ந்த ராக்கி மலைகள் 14,000 அடி உயரம் வியாபித்திருக்கிறது. இந்த ராக்கி மலைகளுக்கப்பால் சராசரி கடல் மட்டத்திலிருந்து 7,000 அடி உயரமுள்ள ஒரு மேட்டுச் சமவெளி உள்ளது. இன்னும் மேற்கில் நோக்கினால் சிறிய மலைத் தொடர்களைக் காணலாம். ஒரு சிறிய மலைத் தொடர் பஸிபிக் கடற்கரையின் விளிம்புபோல் செல்லுகிறது.

அமெரிக்கா எட்டு பெரிய நதிகளைக் கொண்டிருக்கிறது. 2,470 மைல்கள் நீளமுள்ள மிஸிஸிபி நதி எல்லா நதிகளையும் விடப் பெரியது. ஹட்ஸன் நதி நாட்டின் கிழக்குக் கடற்கரை

யோரமாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் சங்கமமாகிறது. இன்னும் தெற்கில் "பொடோமாக்" நதி செஸபேக் குடாவின் மூலம் அட்லாண்டிக் சமுத்திரத்தில் பாய்கிறது.

மிஸிஸிபி நதி, கனடா அருகில் உள்ள மின்னிஸோடா பிரதேசத்தில் உற்பத்தியாகி, தென் அமெரிக்கக் கடற் கரையிலுள்ள நியூ ஆர்லீன்ஸில் மெக்ஸிகோ குடாவை அடைகிறது. ஓஹையோ நதி அப்பலாசியன் மலைகளிலிருந்து மேற்கு முகமாக ஓடி மிஸிஸிபியுடன் கலக்கிறது. மிஸிஸிபியுடன் கலப்பதற்காக, ராக்கி மலைகளின் வடபுறமிருந்து மிஸௌரி நதி தென் கிழக்காகப் பாய்கிறது.

கொலம்பியா நதி, கனடாவில் தோன்றி, ராக்கி மலைகளின் மேற்கிலுள்ள மேட்டுச் சமவெளியின் குறுக்காக ஓடி, **200** மைல்கள் கீழே, மேற்குக் கடற்கரையில், பஸிபிக் சமுத்திரத்தையடைகிறது.

கொலராடோ நதி கொலராடோ பிரதேசத்தில் தோன்றி தென்மேற்காக ஓடி, அரிஸோனுவிலுள்ள இயற்கையாக அமைந்துள்ள, செங்குத்தான பிளவுப் பள்ளத்தாக்கின் மூலமாகப் பாய்ந்து, மெக்ஸிகோவின் மேற்கிலுள்ள கலிபோர்னியா குடாவில் வடிகிறது.

கனடாவிற்கும் அமெரிக்க நாடுகளுக்கும் எல்லையாக அமைந்துள்ள ஐந்து பெரிய ஏரிகள் உலகத்திலேயே பெரிய உள்நாட்டு சுத்த ஜல நீர்த்தேக்கமாக அமைந்துள்ளது.

1950-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி அமெரிக்காவின் ஜனத்தொகை **15,06,97,361**. இதில் மூன்றில் இரண்டு பாகம் நகரங்களிலும் மிகுதியுள்ளவர்கள் கிராமங்களிலும் வசிக்கிறுர்கள். இங்கு **5,00,000** ஜனத்தொகையுள்ள பதினெட்டு நகரங்கள் உள்ளன. இவைகளில் நியூயார்க், சிகாகோ, பிலடல்பியா, லாஸ் ஏன்ஜல்ஸ், டெட்ராய்ட், ஆகிய ஐந்து நகரங்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஜனங்கள்

வசிக்கிறார்கள். நியூயார்க் நகரத்தின் ஜனத்தொகை கிட்டத்தட்ட **80,00,000** ஆக மதிப்பிடப்படுகிறது.

அமெரிக்காவின் இன்றைய ஜனத்தொகை சில திட்டமான மாறுதல்களைக் காட்டுகிறது. அமெரிக்க சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஆண்களைவிட பெண்களின் ஆதிக்கம் சிறிது அதிகமாயிருக்கிறது.

விவசாயிகளின் ஜனத்தொகை குறிப்பிடத்தக்க குறைவை காட்டுகிறது. அதே சமயத்தில் தலை நகரத்தில் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது.

மேற்குக் கடற்கரை பிரதேச ஜனத் தொகையில் ராஜ்யங்களில் இரண்டாவதாக உள்ள கலிபோர்னியா மிக அதிகரிப்பான ஜனத் தொகையைக் காட்டுகிறது. **1940**-ம் வருஷத்திலிருந்து கலிபோர்னியா, ஆரிகன், வாஷிங்டன், அரிஸோனு, நிவாடா, ஆகிய தூர மேற்கு ராஜ்யங்கள் **35** சத விகிதத்திற்கும் அதிகமான ஜன அதிகரிப்பைக் காட்டுகின்றன.

1940-லிருந்து பொதுவாக நாட்டின் ஜன அதிகரிப்பு கிட்டத்தட்ட கீழே கண்ட முறைப்படி உள்ளது :—

நியூ இங்கிலாந்து, மத்ய அட்லாண்டிக் பிரதேசங்களைக் கொண்ட வட கிழக்கு ராஜ்யங்கள் **9** சத விகிதம். வட மத்யப் பிரதேசம் **10** சத விகிதம். தெற்குப் பிரதேசம் **13** சத விகிதம். ராக்கி மலைகள், பஸிபிக் கடற்கரைப் பிரதேசங்களைக் கொண்ட மேற்குப் பக்கம் **40** சத விகிதம்.

அமெரிக்கா பத்து ஆண்டுகளுக்கொருமுறை ஜனக் கணக்கு எடுக்கிறது. **1790**-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட முதல் ஜனக் கணக்கு, புதிதாக ஏற்பட்ட அமெரிக்க ராஜ்யங்களைவிட **40,00,000**க் குறைவான ஜனத்தொகையுடையதாக காண்பித்தது.

1790-லிருந்து **1860** வரை ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கும் மூன்றில் ஒரு மடங்காக ஜனத்தொகை அதிகரித்து வந்தது.

1860-லிருந்து 1940 வரையில் ஜன அதிகரிப்பு குறைவாக உள்ளது, ஆனால் 1940-லிருந்து 1950 வரை ஒரு திடீர் மாறுதல் ஏற்பட்டு 14 சத விகித அதிகரிப்பு அதாவது 19,028,086 நபர்கள் 1940-ம் வருட ஜனக் கணக்கைவிட அதிகமாயிருந்தார்கள்.

ஜனத்தொகையின் அதிகரிப்புக்கு முக்கிய காரணம் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் குடியேறியது தான். 1820 முதல் 1949 வரையிலுள்ள ஒன்றேகால் நூற்றுண்டில் அமெரிக்காவின் குடியேற்றம் கீழ்க்கண்ட விகிதம்:— ஐரோப்பிய நாடுகளிலிருந்து குடியேறிய 33,047,224 நபர்களும், ஆசியாவிலிருந்து 946,540 நபர்களும், அமெரிக்கக் குடியரசு, கனடாவிலிருந்து 4,712,079 நபர்களும், ஆக மொத்தத்தில் 38,705,843 ஆக அதிகரித்தனர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜனனக் கணக்குப் புள்ளி முக்கியமாக அதிகரித்திருக்கிறது. 1949-ம் வருடம் அமெரிக்காவில் 1941-ஐ விட 1,012,000 குழந்தைகள் கிட்டத் தட்ட அதிகமாகப் பிறந்தனர்.

1950-ல் அமெரிக்க ஜனத்தொகையில் 10 சத விகிதம் நீக்ரோக்கள். அமெரிக்க இந்தியர்கள், 402,000. இது 50 வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட 164,000 நபர்கள் அதிகம் காட்டுகிறது.

ராஜ்ய பரிபாலனம்
அல்லது
அரசாங்க அமைப்புமுறை

அமெரிக்க நாடுகள் 48 சிறிய ராஜ்யங்கள் அல்லது பொது நலக் குடியரசுகளைக் கொண்ட ஒரு ஐக்கியக் கூட்டுறவு. அத னுடைய அடிப்படைச் சட்டம், தேசீய அரசாங்கத்தின் முறைக ளையும் வகைகளையும், முக்கியமாக அவைகளின் சட்டங்கள் அதிகாரங்கள் இவைகளையும், வரையறுக்கும் ஒரு ஆட்சி ஏற்பா டாகும். மற்ற அதிகாரங்களையும் பொறுப்புகளையும் இது தனிப் பட்ட ராஜ்யங்களுக்கு அளித்திருக்கிறது. ஒவ்வொரு ராஜ்யமும் சிறிய, ராஜீய, தனிப்பட்ட அரசாங்கங்களுடைய ஜில்லாக்கள், நகரங்கள், கிராமங்களாகிய உட்பிரிவுகளைக் கொண்டுள்ளதாக இருக்கிறது. பொதுவாக ஒவ்வொரு சிறிய பிரிவின் சட்டங்கள், ராஜீய ஆட்சி ஏற்பாட்டினாலும், ராஜீய சட்டங்களாலும், வகுக்கப் பட்டுள்ளன. அமெரிக்காவிலுள்ள எல்லா அரசாங்கமும் மக்களினால், மக்களின் விருப்பத்துடனேயே நடத்தப்படும் ஒரு ஆளுகையாகும். ஜனங்களுக்கு ராஜீய வியவகாரங்களில் தலை மையான அதிகாரமுண்டு. பிரசித்தி பெற்ற வாக்குரிமைகளி னால், மத்திய காங்கிரஸ், ஜனாதிபதி, ராஜீய சட்ட சபைகள், கவர்னர்கள், ஜில்லா-நகர அமைப்பு முறை ஏற்பாடு செய்பவர் கள், அதிகாரிகள், எல்லோரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். மற்ற அதிகாரிகளும் நீதி மன்றத்து அதிபதிகளும் நேராக ஜனங்களினாலோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளி னாலோ நியமிக்கப்படுகிறார்கள். சுய ஆட்சியின் அடிப்படை ஆதாரம் ரகசிய ஓட்டுரிமை. வாக்குரிமையின் உதவி கொண்டு, அதிகாரிகளை அதே இடத்திற்கு தேர்ந்தெடுக்கவோ, அல்லது அவர்களுக்கு பதிலாக மற்றவர்களை நியமிக்கவோ வாக்காளர்க

ளினல் முடியும். அதிகாரிகள் நெறி தவறினலோ அல்லது திரும்ப அழைக்கப்படுவதினலோ பதவி மதிப்பின்றி வெளி யேற்றப்படலாம். **1790**-ல் முதலாயமைந்த பதின் மூன்று ராஜ்யங்களினல் ஊர்ஜிதப்படுத்தப்பட்ட ஆட்சி ஏற்பாடு நாட்டி லுள்ள எல்லா மக்களின் தனி உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கிறது.

இந்த சுதந்திரங்கள் **1791**-ல் ஆட்சி ஏற்பாட்டுடன் சேர்க்கப் பட்ட உரிமை மசோதாவில் குறிக்கப்பட்டுள்ளன. அவைக ளாவன :—பேச்சு சுதந்தரம், பத்திரிகை சுதந்தரம், பிரார்த் தனை சுதந்திரம், அமைதியான கூட்டுறவு உரிமை, நியாயமற்ற சோதனைகள், கொள்ளைகள் இவைகளிலிருந்து ஒருவர் வீட்டைக் காக்கும் உரிமை, குற்றம் சாட்டப்பட்டவனுக்கு மத்யஸ்தர்களி னல் நியாய விசாரணைகள்.

ஆட்சி ஏற்பாட்டின்படி தேசீய அரசாங்கங்களின் அதிகாரங் கள் மூன்று பிரிவுகளில் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகளில் முதலாவது ஜனதிபதியின் தலைமையிலுள்ள "காரிய நிறை வேற்றுப்" பிரிவு. இரண்டு: பிரதிநிதி சபையும் மேல் சபையும் கொண்ட, சட்டங்கள் செய்யும் அமெரிக்க காங்கிரஸ் பிரிவு. மூன்று ஸுப்ரீம் கோர்ட்டைத் தலைமையாகக்கொண்ட நியாய இலாக்கா. மத்ய அரசாங்கத்தின் சட்டவரையறை விளக்கங் களும், அதன் ஒவ்வொரு தனிப் பிரிவும், அளவுக்கு மீறிய அதிகாரங்களையடையாமலிருக்க, சமநிலை கண்டிப்பு முறைகளை ஏற்பாடு செய்கிறது.

மத்ய அரசாங்கத்தைப்போலவே தனி ராஜ்யங்களும் கவர்னரைத் தலைமையாகக் கொண்டு, காரியங்கள் நிறைவேற் றும் பிரிவு, சட்டசபைப் பிரிவு, நியாய இலாகா என்ற மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன. இதேமாதிரி தனிப் பிரிவுகள் இதர நாடு—நகரங்களிலும் காணப்படுகின்றன. மத்ய ஆட்சி ஏற்பாட்டைத் தொகுத்தவர்கள் வருங்கால மாறுதல்களையும் முன்னேற்றங்களையும் எதிர்நோக்கி சட்டங்களைத் திருத்தி யமைக்க

வழி செய்து வைத்தனர். ஊர்ஜிதப் படுத்தப்பட்டதிலிருந்து 22 திருத்தங்கள் ஆட்சி ஏற்பாட்டை நவீனமாகவும் பயன்படக் கூடியதாகவும் ஆக்கியுள்ளன. 164 வருடங்களுக்கு முன்பு, முதலாயமைந்த 13 ராஜ்யங்களுக்காக திட்டமிடப்பட்ட "மாதிரி அரசாங்கம்", இன்று 154,000,000 மக்களேயும், 48 ராஜ்யங் களேயும், 3,000 மாவட்ட ஆட்சிகளேயும், அநேக ஆயிரம் சுய ஆட்சிமுறை பிரிவுகளேக் கொண்ட நாட்டின் தேவைகளேப் பூர்த்தி செய்கின்றது.

இதே மாதிரியாக ராஜீய ஆட்சி ஏற்பாடுகளும் மாறும் நிலேகளேயொட்டி திருத்தியமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஜனங் களின் வாக்குரிமைகளினுல் நகர, கிராம சமூகங்களின் தேவைக ளுக்கேற்றவாறு, உள்நாட்டு அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட் டுள்ளன.

சர்க்கார் அமைப்பு முழுவதும் புராதன அமெரிக்க ராஜீய கொள்கைகளே அடிப்படையாகக் கொண்டது. அதிகாரங்கள் கொடுக்கப்பட்டவர்களேப் பிரிப்பதும், சட்டசபை நியாய இலாகாப் பிரிவுகளும், தனிப்பட்ட அல்லது தனி நபர்களேக் கொண்ட ஒரு பிரிவினர் சர்வாதிகாரத்தை அமைப்பதிலிருந்து, . தடுப்பதற்கு உதவுகின்றன. அரசாங்கம் முடிந்த வரையில் மத்யமாக்கப்பட் டுள்ளது. உள்நாட்டு அரசாங்கங்கள் உள்நாட்டுப் பிரச்னேகளேத் தீர்க்கின்றன. ராஜீய அரசாங்கம் ராஜ்ய எல்லேக்குள் அமைந் துள்ள பல சமூகங்களின் பிரச்னேகளேத் தீர்க்கின்றன. மத்ய அரசாங்கம் ஒரு ராஜ்யத்தைவிட அதிகமாக பாதிக்கும் பிரச்னே களேத் தீர்க்கின்றன. இங்கு தேசீய போலீஸ் படையினர் கிடையாது. இந், நாட்டின் போலீஸ்படை சாதாரணமாக சிறியது தான். உள் நாட்டு அதிகாரத்திற்குள்ளமைந்த நகர போலீஸ், சட்டம் நிறைவேற்றும் பொறுப்புகளே பூர்த்தி செய்கின்றன.

மத்ய ஆட்சிக் கோட்பாடு, காங்கிரஸின் அதிகாரங்களே விளக் கியும், அமெரிக்காவின் பொது நன்மைக்கும் பாதுகாப்பிற்கும், உசிதமான அவசிய சட்டங்களேச் செய்ய, அதை அனுமதிக்கிறது.

நாடு முன்னேறுவதின் பொருட்டு இந்த சட்டங்கள் சமூக நன்மைக்கும், பொது சேவைக்கும், பொருளாதாரக் கட்டுப்பாட்டுக்கும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தேவையான கோட்பாடுகளைக் கொண்டு, பரந்த நோக்கமுள்ளதாக உள்ளன. எல்லைக்கு மீறிய அதிகாரம் மத்ய சர்க்கார் அடைவதிலிருந்து தடுக்கும் தொடர்ந்த பாதுகாப்பை ஸுப்ரீம் கோர்ட்டு ஏற்று வருகிறது.

அரசாங்கத்து நியாயப் பிரிவின் தலைமையிலுள்ள இந்த நியாயஸ்தலம், அமெரிக்க சபைகளாலும், ஜனாதிபதியினாலும் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களை, நியாயஸ்தலத்தின் அதிகமான பிரதிநிதிகள் ஆட்சி ஏற்பாட்டிற்கு முரண்பாடாகக் கருதினால் அவைகளை தங்கள் தீர்ப்பால் ரத்துசெய்ய முடியும்.

ஜனாதிபதிதான் சேனாதிபதி என்று இருந்த போதிலும் காங்கிரஸ் மட்டுமே யுத்தப் பிரகடனம் செய்ய முடியுமென்ற முக்கியத் தடுப்பு ஆட்சிக் கோட்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் அமைப்பு முறை

அமெரிக்க நாடுகளின் ஜனாதிபதி அரசாங்கத்தின் திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வரும் கிளைப் பிரிவின் தலைவராக இருக்கிறார். இவர் அக் காரியாலயத்தில் ஒரு நாலு வருட குறிப்பிட்ட கால அளவிற்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறார். இவருடைய வருடச் சம்பளம் 100,000 டாலர்கள். பிரயாணம் இன்னும் இதர படிகளும் உண்டு. இவர் அமெரிக்க நாட்டிலே பிறந்து வளர்ந்த பிரஜையாகவும், குறைந்த பட்சம் 35 வயதுள்ளவராயுமிருக்கவேண்டும்.

இவருடைய முக்கிய கடமை, அரசாங்க ஏற்பாட்டில் குறிக்கப் பட்டுள்ள காரியக்கிரமங்களையும், காங்கிரஸினால் வகுக்கப்பட்ட சட்டங்களையும் நிறைவேற்றுவதாகும். இன்னும் அதிகமாக அவர், காங்கிரஸுக்கு, பெரும்பாலான சட்டங்கள் ஏற்படுத்து வதில், சிபாரிசு அளித்துப் பேசுவார். அரசாங்கக் காரியங்கள் நடப்பதற்கு தேவையான குறிப்பிட்ட நிதியை ஒதுக்கி வைப் பதற்கும் சிபாரிசு செய்வார். ஜனாதிபதிக்கு, காங்கிரஸினால் நிறுவப்பட்ட சட்டங்களைத் தடை செய்வதற்கு, அதிகாரமுண்டு. அப்படியிருந்தும் பதிலுக்கு காங்கிரஸ், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பாலான வாக்காளர்களைக் கொண்டு அவருடைய தடை உத்திரவைமீறி சட்டங்கள் இயற்றலாம்.

அரசியல் நீதிபதிகளையும், இதர நாடுகளின் பிரதிநிதிக ளையும், அரசாங்கப் பல பிரிவுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி நியமனம் செய்கிறார்.

ஜனாதிபதிக்கு, அவருடைய கடைமைகளை நிறைவேற்றுவதற்கு உதவியாக, அப்போதைக்கப்போது காரியங்களை நிறைவேற்றித்

தரும் அரசாங்க அதிகாரிகள் கொண்ட இலாகாக்களை, காங்கிரஸ் உற்பத்தி செய்து தருகிறது.

இவ்விலாகாக்களின் தலைவர்கள் சாதாரணமாய் "செக்ரடரி" அதாவது காரியதரிசிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் ஜனாதிபதியின் மந்திராலோசனை சபை என்று ஒன்றை அமைக்கிறார்கள். இவர்களை, மேல் சபையின் அங்கீகாரத்துடன் ஜனாதிபதி நியமனம் செய்கிறார். இவர்களுடைய உத்தியோக காலவரையறை ஜனாதிபதியின் கருத்தைப் பொறுத்திருக்கிறது.

அரசாங்க இலாகாவின் தலைவரான, காரியதரிசி ஜனாதிபதிக்கும், உப-ஜனாதிபதிக்கும் அடுத்தபடியாக உள்ள ஸ்திதியிலிருக்கிறார். இவர் அயல் நாட்டுக் கொள்கைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தலைவருக்கு அதாவது ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுபவர். இவருடைய இலாக்கா, இதர நாட்டு சமுதாயங்களுடன் தொடர்பு கொண்டதாகவும், பல நாடுகள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கும், கீழ்படியச் செய்வதற்கு உதவியாக இருப்பதும், அமெரிக்கக் குடி ஜனங்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்குவதிலும், அயல் நாட்டிலிருந்து காண வருபவர்களுக்கு உதவி செய்வதும் இதன் பொறுப்புகள்.

மத்ய சர்க்காரின் நிதி சம்பந்தமான விஷயங்களை பொக்கிஷ இலாகா நிர்வகிக்கிறது. இதன் கடமைகளாவன: வரி, சுங்க வரிகள் வசூல், நாணயம் காகித நோட்டுகள் அச்சிடுவது, கடற்சுங்கக்காவல் முதலியவை.

பாதுகாப்பு இலாகா மக்கள் பயமின்றி வாழ உதவுகிறது. தரைப் படை, கடற் படை ஆகாயப் படை இவை மூன்றின் அமைப்பு தேவை சாதனங்கள், பயிற்சியளிப்புக்குள்ள பொறுப்புகள் இவைகள் மூன்று காரியதரிசிகள் மேற்பார்வையிலுள்ளன: பாதுகாப்புத்தலைவருக்கு இவர்கள் பொறுப்புள்ளவர்கள்.

வழக்கறிஞர் தலைவர் நியாய இலாகாவின் தலைவராக இருக்கிறார். இவர் அமெரிக்க நாடுகளின் நீதி சம்பந்தப்பட்ட

விஷயங்களின் பிரதிநிதியாகவும், ஜனுதிபதியினுலும், அரசாங்க அலுவலக இலாக்காக்களின் தலைவர்களினுல் தேவைப்படும் பொழுது ஆலோசனையும், அபிப்பிராயங்களும் வழங்குகிருர். இவர் அரசாங்க சட்டங்களை மீறுவதைக் கண்டித்துத் தண்டனை கொடுத்து, அரசாங்கக் கைதிகளை மேற்பார்வையிட்டு நாட்டில் குடியேறும் ஒழுங்கு முறையையும் நிறைவேற்றுகிருர்.

தபால்களைப் பெற்று, பட்டுவாடா செய்து, நாட்டின் பல தபாலாபீசுகளை இயக்கும் தபால் இலாக்காவிற்கு தலைமை வகிப்பவர் போஸ்ட்-மாஸ்டர்-ஜெனரல்.

உள் நாட்டு இலாகா, சேமப் பொருள்களை பாதுகாத்து உற்பத்தி செய்கிறது. இவ்விலாகா 40,200 அமெரிக்க இந்தியர்களின் சுகாதாரம், பொது நலம், கல்வி, இவைகளை மேற்பார்த்தும், தேசீயப் பூங்காக்கள், இன்னும் இதர பொது நிலங்களை மேற்பார்த்தும், சுரங்கப் பாதுகாப்பு விதிகளை வகுத்தும், அரசாங்க சட்டங்களின்படி நிர்வகித்தும், வேட்டையாடுதல், மீன் பிடித்தல், இவைகளை ஒழுங்கு படுத்தி நடத்துவதற்கும் உள்ளது.

உணவு உற்பத்தி, விவசாய உற்பத்தியளவு, விவசாயிகளின் நலன் இவைகளுடன் தொடர்பு கொண்டது விவசாய இலாகா. இதனுடைய அநேக வேலைகள்: உணவுப் பொருள்கள் விநியோக அறிக்கை தயாரிப்பது, உணவுப் பொருள்கள் முன்னேற்றத்துடன் அனுப்பப்படுவது, விளைபொருள்களின் விலை நிர்ணயம், விளை நிலங்களை விஞ்ஞான முறைப்படி சீரான முறையில் சோதனை செய்து குறிக்கோளுடன் முன்னேற்றுவது, பயிர்களின் வளர்ச்சிக்குக் கேடான புழு பூச்சி இதர பிராணி, வியாதிகளைத் தொலைப்பது, கிராம மின்சார வசதிக்கான அமைப்பு முறைக்கு வேண்டிய கடன் நிதிகளை கொடுப்பது, முதலியன.

வியாபார அபிவிருத்தி இலாகா உள்நாட்டின் வியாபாரத்தையும் வெளி நாட்டு வியாபாரத்தையும் உயர்த்தி அபிவிருத்தி

செய்து வருகிறது. இது, சுரங்கம், உற்பத்தி, ஏற்றுமதி-இறக்கு மதி, மீன் பிடிக்கும் தொழில், இன்னும் இதர நாட்டின் போக்கு வரவு சாதனங்களில் சேவை செய்கிறது.

கடற்கரை, பூமியின் மேற் பரப்பைப்பற்றிய கணித மேற் பார்வை, பத்து வருடத்திற்கொருமுறை ஜனக் கணக்கெடுக்கும் அரசாங்க காரியாலயம், புதிதாக செய்யப்பட்டுள்ளவைகளுக்கு உரிமை வழங்கும் காரியாலயம், தேசீய நிர்மாண அமைப்பு காரியாலயம், உள் நாட்டு நீர் நிலை சங்கம், கால நிலை அறி விக்கும் இலாகா, சமூக ஆகாயவிமானக் கலையை ஊக்கம ளித்து உற்சாகப் படுத்தும் உள்நாட்டு ஆகாய விமான நிர்வாகம், ஆகாய விமானப் போக்குவரத்தின் கட்டுப்பாடு, பாதுகாப்பு முதலியன இவ்விலாக்காவின் கிளைகளுள் இருக்கின்றன.

அமெரிக்காவின் தொழில் இலாகா, வேலை செய்பவர் களின் க்ஷேமங்களை கவனித்து ஊக்கமளித்து முன்னேற செய் யவும், அவர்களின் வேலை நிலையை உயர்த்தவும், லாபகரமான தொழிலுக்கு, அவர்களின் சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு உதவி செய்வதும் இந்த இலாகாவின் திட்டம்.

இது, கூலி, வேலை நேரம், தொழிலாளர்களின் உறவு, தொழிலாளர்களின் க்ஷேமலாப அபிவிருத்தி வழிகள் இவைகளைக் குறிக்கும் செய்திகளையும் புள்ளி விபரங்களையும் தொகுத்து, பகிர்ந்தளிக்கிறது. இந்த இலாகா, முதலாளிகளுக்கும் தொழி லாளர்களுக்கு மிடையே நிலவும் விவாதங்களை சமாதான முறை யில் தீர்த்து அரசாங்கத்தினல் உற்பத்திச் செய்யப்படும் அநேக, பொருள்களுக்கு விதிப்படி அமைந்துள்ள நிர்ணயத்தை அமைத்து, குறைந்தபட்ச கூலியும், நீண்ட வேலைக்கும் எதிராக உள்ள சட்டக் கட்டுப்பாட்டை பலாத்காரத்தினல் நிறை வேற்றவும் உதவி செய்கிறது.

இந்த மாதிரியுள்ள சர்க்கார் இலாகாக்களை விட இன்னும் அநேக காரியாலயங்களும், உத்தியோக சாலைகளும் மத்திய

சர்க்காரின் அலுவல்களை நடத்துகின்றன. இவைகள் சாதாரண மாக சுதந்திரமான உத்தியோக காரியாலயங்கள். ஏனென்றால் இவைகள் சர்க்கார் இலாகாக்களி லிருந்து தனியாக பிரிக்கப் பட்டிருப்பதால்: ராஜாங்கக் காரியக்கமிட்டி, சட்டசபை நீதிப் பிரிவுகளின் கட்டுப்பாடுகளுக்கு இவைகள் உட்பட்டிருந்தபோ திலும் சுதந்திரமான அதாவது சுயேச்சையான காரியாலயங் கள் என அழைக்கப்படுகின்றன.

அரசாங்கத் தொழில்களை கட்டுப்பாடு செய்து ஒழுங்கு படுத் தும் சமூக சேவை சங்கம் இவைகளுள் ஒன்ருக இருக்கிறது.

வரவு செலவுக் கணக்கிடும் ஆபீஸ் சர்க்காரின் உரிமைகளை நிலை நிறுத்தி சரிக்கட்டவும், நிராகரிக்கவும், சர்க்காரின் சகல வரவு செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்யவும் அதிகாரம் பெற்றிருக்கிறது.

உள்நாட்டு வியாபார சங்கம் "பொதுநடப்பு" வியாபாரச் சங்கம் என்ற பெயர் பூண்டு இருப்புப் பாதைகள், கப்பல்கள், பஸ்ஸுகள், சுமை ஏற்றும் வண்டி, குழாய்க் கம்பிகள் இவை களுக்கு கட்டணம் விதித்து, பொறுப்பேற்றல் போன்றவைகளை ஒழுங்குபடுத்துகிறது. இருப்புப் பாதை சாலைகளையும், பொது மோட்டார் வண்டியின் சாதனங்களையும் பாதுகாக்கும் குறிக் கோள்கள் கொண்ட சட்டங்களை இது அமுலுக்கு கொண்டு வருகிறது.

அரசாங்க வியாபார நியமனத்திற்கு, நேர்மையற்ற முறைக ளில் கையாளப்படும் வியாபாரங்களை சோதனை செய்யவும் தடுக் கவும் பொறுப்புகள் உண்டு.

ராஜீய செய்திஸ்தாபனக்குழுவினர்கள் சங்கம், வியாபாரத் தொடர்பை தந்தி, ஒலிபரப்பு மூலம் ஒழுங்கு செய்கிறது. ஒலி பரப்பு நிலையம், ஒலிபரப்பியாளர்களுக்கு அனுமதியளிக்கிறது. டெலிபோன், தந்திச் செய்தி சேவைக்கு தீர்வை நிர்ணயிக்கிறது.

அணுசக்தி கமிஷன், அணு சக்தியின் அபிவிருத்தியையும், உபயோகத்தையும் மேற்பார்வை யிடுகிறது.

வைத்திய சம்பந்தமான நிர்வாகம், இயலாத ராணுவத்தில் அனுபவ மிகுந்தவர்களுக்கு வைத்திய சாலைகள் கட்டி நிர் வகிப்பதும், யுத்தத்தில் சேவை செய்தவர்களுக்கும், அவர்க ளுடைய விதவை மனைவியர்கள், அவர்களைச் சார்ந்தவர்களுக் கும், உபகாரச் சம்பளம், கல்வி வசதிகள் முதலான சமனங் களையும் அமைத்துக் கொடுப்பதற்கு பொறுப்பாளியாக உள்ளது.

பரிவர்த்தனைப் பாதுகாப்பு கமிஷன், பண்டங்கள், பத்தி ரங்கள் இவைகளை பரிவர்த்தனை செய்வதில், அவைகளை வாங்கும் விற்கும் நபர்களுக்கு உதவியாக இருக்கிறது.

மத்திய பாதுகாப்புஸ்தாபனம், கல்வி இலாக்கா, பொது நல சுகாதார சேவை, சமூக அபாயமற்ற நிர்வாகம், உணவு, மருந்து சரக்குகளின் நிர்வாக இலாக்காகளையும் மேற்பார்வை யிடுகிறது.

ஐக்கிய அரசாங்கத்தின் சட்டசபைப் பிரிவான காங்கிரஸ் சபைக்கு மொத்தத்தில் 531 அங்கத்தினர்கள் உண்டு.

அதன் அங்கத்தினர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 15,000 டாலர்கள் கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் இரண்டு நபர்கள் வீதம் 48 நாட்டிலிருந்து 96 ஆலோசனை சபை அங்கத்தினர்கள் கொண்டதாக இருக்கிறது மேலோர் சபை.

இவ்வங்கத்தினர்கள், பிரசித்திபெற்ற, ஜனங்களால் விரும்பப்படுகிற, வாக்குரிமையினால் ஒரு ஆறு வருட கால வரையறைக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் ஆலோசனை சபையின் அங்கத்தினர் கள் மூன்றில் ஒரு பாகம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ் வங்கத்தினர்கள் தேர்தலின் பொழுது முப்பது வயதிற்கு மேற் பட்டவர்களாயும் அமெரிக்க நாட்டின் பிரஜையாக குறைந்த பட்சம் 9 வருஷங்களாவது இருக்கவேண்டும்.

பிரதிநிதி சபைக்கு 435 அங்கத்தினர்கள் உண்டு. இவர்கள் இரண்டு வருட காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் தேர்தலின் பொழுது குறைந்த பட்சம் 25 வயதுக்குக் குறையாமலும், 7 வருஷங்களுக்குக் குறையாமல் அமெரிக்க நாட்டின் பிரஜையாகவுமிருக்கவேண்டும். காங்கிரஸில் உள்ள ஒரு நாட்டின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அந் நாடுகளில் உள்ள ஜனத்துகையைப் பொறுத்திருக்கிறது. மிகவும் ஜனத்தொகை நெருக்கமுள்ள நியூயார்க்கின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் 45 ஆக இருக்கிறார்கள். இந்த நாடுகள் அவைகளின் பிரதிநிதி ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு ஜில்லாவின் வாக்காளர்களினாலும் ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு செயலாற்றுவதற்காக காங்கிரஸில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இரண்டு காங்கிரஸ் சபைகளின் அதிகாரங்களும் மிகவும் மென்மையான முறையில் சமமாக இருக்கிறது. சட்டங்கள் இயற்றுவதில் மேல் சபையும் பிரதிநிதி சபையும் கிட்டத்தட்ட சமமான உரிமைகளைப் பெற்றிருக்கின்றன. இரண்டு சபைகளும் வரி விதிப்பின் உயர்வைத் தவிர இதரச் சட்டங்களை இயற்றலாம். அவைகள் பிரதிநிதி சபையிலிருந்து பிறப்பிக்கப்பட வேண்டிய விஷயம்.

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட, தலைமை நியாயாதிபதிகள் மத்திய அரசாங்க நீதிபதிகள், அரசாங்க தூதர்கள், இன்னும் அரசாங்கத் தலைவர்கள் இவர்களை ஊர்ஜிதப் படுத்தவோ, நிராகரிக்கவோ மேல் சபை ஒன்றுக்குத்தான் அதிகாரமுண்டு. ஜனாதிபதியினால் பிரேரேபிக்கப்படுகிற இதர நாடுகளுடன்கூட செய்யும் சமாதான உடன்படிக்கையை அங்கீகாரம் செய்யவோ, நிராகரிக்கவோ, மேல் சபை ஒன்றுக்குமட்டும்தான் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

அங்கீகாரத்திற்காக பிரேரபணைச் சட்டங்கள் அனுப்பப்படுவதை இன்னொரு சபையினால் ஆமோதிக்கப்பட்ட பின், ஒவ்

வொரு சபையும் அச் சட்டங்களை ஆதரிக்கவும் எதிர்க்கவும் முடியும்.

அரசாங்கத்தின் நியாய சம்பந்தமான பிரிவு, ஸுப்ரீம் கோர்ட்டைத் தலைமையாகக் கொண்ட பல நியாயஸ்தலங்களைக் கொணடு அமைந்திருக்கிறது. அமெரிக்க நாட்டின் சட்டசபைகளுக்கும் சட்டங்களுக்கும் ஏற்படும் சிக்கலான பிரச்னைகளுக்கு விளக்கம் கூறவும், கப்பல் சம்பந்தமான கடற்படை இலாக்காவின் விசாரணை வழக்குகளின் ஆதிக்கம், இரண்டு அல்லது மூன்று சமஸ்தானங்களுக்குள் ஏற்படும் போராட்டங்களை தீர்க்கவும், பலவித சமஸ்தான மக்களுள் ஏற்படும் தர்க்கங்களை நீக்கவுமான அதிகார பூர்வமான ஆதிக்கம் இந்த நியாயப் பிரிவு இலாக்காவிற்கு இருக்கிறது.

தலைமை நியாயஸ்தலத்தின் நீதிபதிகள் அவர்கள் ஆயுள் வரையிலும் நியமிக்கப்படுகிறார்கள்.

நேர்மை தவறி நடந்ததாக, இவர்களை பதவியை விட்டு நீக்குவதற்குப் போதுமான நிரூபணம் இருக்கும் பட்சத்தில் நீக்கிவிடலாம்; அப்படியிருப்பின் பிரதிநிதி சபையினால் இவர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு மேல் சபை அதை விசாரணை செய்து ஆமோதித்த பிறகே அகற்ற முடியும்.

தலைமை நீதிஸ்தலம், ஒரு உயர்ந்த நியாயாதிபதியும் எட்டு உடன் நியாயாதிபதிகளுமடங்கியது.

தலைமை நியாயஸ்தலத்தின் கீழ் இரண்டு விதமான நியாயஸ்தலங்களை காங்கிரஸ் நியமித்திருக்கிறது. ஒன்று மேல் விசாரணை செய்யும் சுற்றுப் பிரயாண நியாயஸ்தலம் மற்றொன்று ஜில்லா நியாயஸ்தலம். அநேக வழக்குகள், மத்ய நியாயஸ்தல ஆதிக்கத்திற்குட்பட்ட ஜில்லாக் கோர்ட்டுகளில் முதலில் சட்டங்களினால் விவாதிக்கப்பட வேண்டும்.

ஜில்லாக் கோர்ட்டின் தீர்ப்பு, கட்சிக்காரர்களுக்கு திருப்தியளிக்காத முறையிலிருந்தால் அவர்கள் மேல் விசாரணைக்கு

மனு செய்து கொள்ளலாம். சில வழக்குகளில் மேல் விசாரணைக்கான மனுக்கள் நேரடியாக தலைமை நியாயஸ்தலத்துக்கு எடுத்துச் செல்லப்படலாம். இன்னும் சில வழக்கின் மனுக்கள், சுற்றுப் பிரயாண மேல் விசாரணை நியாயஸ்தலத்திற்கு முதலில் போய் பிறகுதான் தலைமை நியாயஸ்தலத்திற்கு செல்ல முடியும்.

வாழ்க்கைத் தரம்

அமெரிக்க நாடு தொழிலாளர்களைக் கொண்டதொரு மக்கள் சமுதாயம். **154,000,000** ஜனங்களில் **60,000,000**க்கும் மேற்பட்டவர்கள் கூலி அல்லது சம்புள விகிதத்திலோ, அல்லது கூட்டு வியாபாரத்தில் தலைமை வகித்தோ இருக்கிறார்கள். இதற்கு சமமாக சிலரும், சில குடும்பங்களும், முதலீட்டிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு ஜீவிக்கிறார்கள்.

அநேக அமெரிக்கக் குடும்பங்கள் மின்சார விளக்குகளும், குளிர்ந்ததும் உஷ்ணமானதுமான நீர் வசதியுடையதும், இன்னும் முக்கியமான உஷ்ணப்படுத்தும் சாதனங்களுடையதுமான, நகரத்து அறைகளிலோ வீடுகளிலோ வசிக்கிறார்கள். **6,000,000** பண்ணை வீடுகளில் சுமார் **90** சத விகிதம் மின்சார வசதியும், அதில் சுமார் பாதிக்கு மேல் "டெலிபோன்" வசதியுமுண்டு. கிராமாந்திர வீடுகளில் அதிகப்படியான மின்சார வசதி ஸ்தாபித்தலும் ஓடும் தண்ணீர் வசதியும், சுகாதார சௌகரியங்களும் அதிக கவனத்துடன் முன்னேறிக்கொண்டு வருகிறது.

1950-ல் நாடு முழுவதும், வாடகைக்குக் குடியிருப்போர்களின் வசிக்கும் அளவு சராசரி **4** அறைகள். குடும்பத்தில் சராசரி மூன்று அல்லது நான்கு நபர்கள் இருந்தார்கள். **1950**-ல் பாதிக்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்களுக்குச் சொந்தமான வீடுகளைப் பெற்றிருந்தார்கள்.

சாதாரண, சராசரி அமெரிக்க உணவு, விதவிதமானதாகவும் உயர்தரமான சத்துள்ள பொருள்களாகவுமிருக்கிறது. சராசரித் தொழிலாளி ஒவ்வொரு வருடமும் வாங்கும் புதுத் துணிகளில் ஒரு புது உடுப்புத் தொகுதி, ஐந்து புது சொக்காய்கள், மூன்று ஜதைகள் உள் உடுப்பு, இரண்டு ஜதை

செருப்புகள், ஆறு கைக் குட்டை, 3 கழுத்துப் பட்டி இடம் பெறும்.

ஒரு சாதாரண தொழிலாளியின் மனைவி ஒவ்வொரு வருடமும் 4 புது விதமான உடுப்புகளும், இரண்டு புது குல்லாய்களும் 11 ஜதை காலுறைகளும் இரண்டு புதுத் துண்டுகளும் மூன்று ஜதை ஜோடுகளும் தானுகவே வாங்குகிருள்.

அநேக அமெரிக்கர்கள் ரொக்கமாகவோ, பாங்குகளில் சேமிப்பு நிதியாகவோ, அல்லது அரசாங்கக் கடன் பத்திரங்களும் இன்ஷியூர் மூலமாகவும் பணம் சேர்க்க முயற்சி செய்கிருர்கள். 1950-ல் அமெரிக்க நாட்டில் தனிப்பட்டவர்கள் சேகரித்து சேமித்தது சுமார் 11,900,000,000. இவர்களில் அநேகம்பேர்கள் சாவு அல்லது நஷ்ட காலத்தில் பணம்பெற வேண்டியதற்கான வசதிகளைப் பெற்றிருந்தார்கள். இதில் உலக மகா யுத்தம் முதலாவது, இரண்டாவதில், சம்பந்தப்பட்டராணுவ வீரர்களுக்கு குறைந்தபட்ச விகிதத்தில் அரசாங்க ஆயுள் இன்ஷியூரன்ஸ் திட்டம் சேர்ந்திருக்கிறது.

சுகாதாரமும் வைத்தியப் பாதுகாப்பும்

மஸ்ஸசுஸெட்ஸ் ராஜ்யத்தில் வைத்திருக்கும் பழய காலத்து தஸ்தவேஜுகளிலிருந்து 1789க்குப் பிறகு அமெரிக்கர்களின் ஜீவித காலம் இரண்டு மடங்காக பெருகியது என்பது தெரிய வருகிறது. அப்பொழுது ஒரு அமெரிக்கனின் வாழ்வு 35 வருடங்களாக எதிர் பார்க்கப்பட்டது. இப்பொழுது 67 வருடங்கள். 1900-ம் ஆண்டில் 1,000 ஜனங்களுக்கு மரணக் கணக்கு 17.2 சதவிகிதமாக இருந்தது. 1949-ல் 9.7 சதவிகிதமாக குறைந்துவிட்டது.

உடல் நலப் பாதுகாப்பிற்கு தனிப்பட்டவர்களும், உள்நாட்டு சமூகத்தினரும், அரசாங்கமும், மத்யசர்க்காரும் கூட்டுப் பொறுப்பாளிகள். பொதுநல சேவை செய்பவர்கள் உண்மையிலேயே காலரா, மஞ்சள் காமாலே, அம்மை, டைபாயிட் இன்னும் அநேக விதமான வியாதிகளேக் களேந்தெறிந்து விட்டனர். தொண்டைக் கட்டு, விஷ சுரம், கக்குவான் இன்னும் அநேக குழந்தை வியாதிகளினுல் இறப்பவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத் தக்கபடி குறைந்து விட்டது.

1949-ல் தேசீய உள்நாட்டு அரசாங்கம் ஒவ்வொரு நபருக்கும் பொது நல உடல் பாதுகாப்பிற்கு செலவு செய்தது சுமார் 18 டாலர்களாகும்.

அமெரிக்காவில் 1,450,000 படுக்கைகளுடன்கூட 6,572 பதிவு செய்யப்பட்ட ஆஸ்பத்திரிகளிருக்கின்றன. இவைகளில், உலக மஹா யுத்தம் இரண்டிலும் சேவை செய்து அனுபவ மிகுந்த ராணுவத்தினருக்காக 361 வைத்தியசாலேகள் தேசீய சர்க்காரினுல் நிர்வகிக்கப்படுகிறது.

க்ஷய ரோகம், மூளேக் கோளாறு இவைகளினுல் அவதியுறும் மக்களுக்காக 573 வைத்தியசாலேகளே உள்நாட்டு அரசாங்கம் நிர்வகிக்கிறது.

நகரபரிபாலன சபை 1,003 ஆஸ்பத்திரிகளையும் கிறிஸ்தவத் தொகுதிச் சங்கம் 1,090 வைத்தியசாலைகளையும், தனிப்பட்ட லாபத்தை எதிர்பாராமல் செய்யக்கூடிய ஸ்தாபனங்கள் 3,545 வைத்தியசாலைகளையும் நிர்வாகம் செய்து வருகிறது. செலவு செய்து வைத்திய வசதிகளை செய்து கொள்ள முடியாதவர்களுக்கு அநேக வைத்தியசாலைகள் இனமாகவோ அல்லது குறைந்த சிலவிலோ வைத்திய பாதுகாப்பளிக்கிறது.

அநேக பெரியதும், சிறியதுமான, தொழிற் ஸ்தாபனங்கள் தங்களுடைய ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வைத்திய சேவை செய்து தருகிறார்கள். பெரும்பாலான பொதுப் பள்ளிக்கூடக் குழந்தைகளுக்கு இலவச வைத்தியமும், பற்களின் பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. அமெரிக்காவில் சுமார் 150,000 வைத்தியர்களும், 75,000 பல் வைத்தியர்களும் தனிப்பட்ட முறையில் சுருசுருப்புடன் தொழில் நடத்தி வருகிறார்கள். 300,000க்கு மேற்பட்ட பதிவு செய்துள்ள செவிலித் தாய்களும் 97,900 மாணவத் தாதிமார்களுமிருக்கிறார்கள்.

1949, 1950-ல் அமெரிக்க வைத்தியக் கல்லூரிகளில் சுமார் 25,000 மாணுக்கர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இவர்களில் 1,800 ஸ்திரீகள். பல் வைத்தியப் படிப்பிற்கான கலாசாலையில் பதிஞேராயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள்.

அமெரிக்காவில் தனிப்பட்ட, லாபத்தை எதிர்பாராமல் சேவை சேய்து வரும் வைத்திய ஸ்தாபனங்களில், சுமார் 30,000,000க்கு மேற்பட்டவர்கள் வைத்திய இன்ஷியூரன்ஸ் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கு வைத்திய சலுகைகள் காண்பிக்கப்படுகின்றன. அதற்கு பதிலாக இவர்கள் ஆயுள் பாதுகாப்பிற்குச் செலுத்தும் துகைக்குச் சமமான சிறியதுகை செலுத்த வேண்டும். இம்மாதிரி மேலும் பத்தில் ஒரு பங்கு நபர்கள் இந்த லாபமில்லா சேவை திட்டத்தில் முழு வைத்திய பாதுகாப்புக்காக பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

கல்வி

ஒவ்வொரு உள்நாட்டிலும் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டதும், வரிவிதிப்பு ஆதரிப்புத்திட்டத்தின் உதவியினாலும் இலவச பொதுப் பள்ளிக்கூட அமைப்பு முறை இருக்கிறது. நாடு முழுவதும் 1,47,000 இலவச பொது ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் 25,500 இலவச உயர்தரப் பள்ளிக்கூடங்களுமிருக்கின்றன. இதைத் தவிற 10,000 தனிப்பட்ட ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் 3,000 பொது உயர்தரப் பள்ளிகளுமுள்ளன.

1950, 51-ம் ஆண்டில் சுமார் 24,000,000 மாணுக்கர்கள் ஆரம்பப் பள்ளியிலும், சுமார் 6,000,000 உயர்தரப் பள்ளியிலும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். சுமார் 1,000,000 உபாத்தியாயர்கள் இந்த ஆரம்ப உயர்தரப் பள்ளிக்கூடங்களில் வேலை பார்த்து வருகிறார்கள்.

ஒவ்வொரு சிறுவன், சிறுமிக்கும் கல்விமுறை கட்டாயமாக இருக்கிறது. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் பதினாறு வயதுவரை பள்ளியனுபவம் தேவையாயிருக்கிறது, வழக்கமாக ஆரம்பப் பள்ளிக்கூடப் பகுதி எட்டு வருடங்களும் உயர்தரப் பகுதி நான்கு வருடங்களுமாக இருக்கிறது.

கல்வி முறையில் சமூகக் கட்டுப்பாடோ அல்லது மேற்பார்வையோ இல்லை.

நாட்டு மக்களின் பிரதிநிதியான உள்நாட்டு சட்ட சபை அவர்களுடைய எல்லைக்குட்பட்டிருக்கும் சமூகங்களுக்கு தேவையான கல்வி வசதிகளை அமைத்திருக்கிறது.

உள்நாட்டு பள்ளிக்கூட சம்பந்தமான ஆலோசனையாளர்கள், ராஜீய சட்டத்தின் தேவையைக் காட்டிலும் நல்ல

முறையில் கல்வித் திட்டத்தை ஸ்தாபிதம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது, அவ்விதமே செய்தும் வருகிறது.

இந்நாட்டில் **800**க்கு மேற்பட்ட பரந்த நோக்கமுள்ள கலைக் கல்லூரிகளும் கலாசாலைகளும், **323** தொழிற் கல்விக்கான கல்லூரிகளும், **211** உபாத்தியாயர்களுக்கான கல்லூரிகளும் **529** கீழ்த்தரக் கல்லூரிகளுமாகச் சேர்ந்து **1,900** உயர்தரப் படிப்பிற்கான ஸ்தாபனங்கள் உள்ளன. **1950**-ல் கல்லூரிகளில் பதிவு செய்து கொள்ளப்பட்ட நபர்களின் எண்ணிக்கை **260,000**. சுமார் மூன்றில் ஒரு பங்கு அமெரிக்க உயர்தரப் பள்ளிப்பட்டதாரிகள், கல்லூரிகளுக்குச் செல்லுகிறார்கள். பாதிக்கு மேற்பட்ட மாணவர்கள், அரசாங்கத்தினுல் ஆதரிக்கப்பட்ட கல்லூரி, கலாசாலைகளில் இலவசமாகவோ அல்லது குறைந்த செலவிலோ பயிற்சி பெறுகிறார்கள்.

சிறுவர்களைப்போல் சிறுமிகளுக்கும் உயர்தரப் படிப்பிற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. எல்லா வகுப்பு மதங்களிலுமுள்ள மாணவர்களும் கல்லூரிக்குப் போகிறார்கள்.

ஜூன் **1950**-ம் ஆண்டில், கல்லூரி கலாசாலைகளினுல் **498,600** நபர்களுக்கு பட்டமளிக்கப்பட்டிருக்கிறது. **104,000** பெண்கள் பட்டதாரிகளுள்பட **434,000** மொத்த பட்டங்கள், கலாசாலையினுல் வழங்கப்படும் முதல் வகுப்புப் பட்டங்களாக அளிக்கப்பட்டன. அதேபோல் உயர்தரப் பட்டங்கள் **58,000**-ல் **1,700** பெண்களுக்களிக்கப்பட்டன. **6,000** நபர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இதில் **650** பெண்மணிகள்.

சமூகப் பாதுகாப்பு

அமெரிக்க மக்களுக்கு, ஐக்கிய அரசாங்கத்திலுல் வகுக்கப் பட்ட பதினேரு பெரிய திட்டங்கள் சமூகப் பாதுகாப்பிற்கான நிச்சயமான ஏற்பாடுகளேச் செய்கிறது. இவைகளில் ஒன்பது, அதிக வயதாகியும் உயிர் வாழ்ந்திருப்பவர்களின் சௌகரியங் களுக்கான ஏற்பாடுகள், வேலையில்லாதவர்களுக்கு வேலை தேடி கொடுப்பது, வயதான வறுமையாளர்களுக்கு உதவி, எஜ்ழக் குருடர்களுக்கு உதவி, சுயேச்சையாக வாழ முடியாத குழந்தைகளும், முழுவதும் சாசுவதமான முடவர்களுக்கும் உதவி, கர்ப்பமாயிருக்கிற தாய்மார்களுக்கும், குழந்தைகளின் சுகாதாரச் சேவைகளும், முடமான குழந்தைகளுக்குப் பணி செய்வதும், குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்திகளே கவனிப்பது மான ஏற்பாடுகளேச் செய்கிறது. இதைத் தவிர இரண்டு திட் டங்களாவன :—ஒன்று பொது மக்களுக்கு வேலை தேடித் தரும் காரியாலயம், மற்றென்று குறைந்தபட்ச வட்டி விகிதத்தில் சிறிய கடன் துகைகளே கொடுக்கும் கடன் சங்கங்கள்.

அமெரிக்கத் தொழிலாளர்களில் 60,000,000-க்கு கிட்டத் தட்ட 45,000,000 நபர்கள், மத்திய சர்க்காரிலுல் நிர்வகிக்கப் படும் ஜீவிதகாலத் திட்டத்திற்குள் மறைந்திருக்கிருர்கள். இத் திட்டம், தொழிலாளர்கள் 65 வயதிற்குமேல், வேலையினின்று நீங்கும் பொழுது அதாவது அவர்கள் வியாபாரத் தொழிற் சாலையிலோ, பண்ணேகளில் நேர்மையாக வேலை பார்த்து வந்தாலும், அல்லது ஒரு தனிப்பட்ட வீட்டில் வேலைசெய்து நீங்கினவர்களுக்கும் மாதாந்திர சலுகைகளே ஏற்பாடு செய்து கொடுக்கிறது. தவிர அநேக சொந்த தொழிலாளர்கள் வேலையி னின்றும் ஓய்வு எடுத்துக்கொள்ளும்பொழுது, ஓய்வு எடுத்துக் கொண்ட தொழிலாளர்களேச் சார்ந்திருக்கும் நபர்கள், அவர்கள் குடும்பங்கள், பதினெட்டு வயதுவரை அவர்கள் மனேவி குழந்தை

கள், இள வயதில் இறந்துபோகும் தொழிலாளிக்கும் இத்திட்டம் சௌகரியங்களைச் செய்து கொடுக்கின்றது. இந்த நம்பகமான திட்டத்திற்கு வேலை கொடுப்பவர்களும், வேலை செய்பவர்களும் சமமாக முதலீடு செய்து, சம்பளப் பட்டியைப்போல் நடத்தி வருகிறார்கள். தற்சமயம் ஒவ்வொருவருக்கும் $1\frac{1}{2}$ சதவிகிதமாக இருக்கிறது. ஒரு தொழிலாளியின் வருடாந்திர வருமானம் 3,600 டாலர்களுக்கு அப்பால் இருந்தால் இந்த வரிக்குக் கட்டுப் படாது.

1950-ல் இந்த வயதானவர்களின் ஜீவிதகால திட்டத்தின் கீழ் 3,477,000 நபர்கள் மொத்தம் 961,000,000 டாலர்களை சலுகையாக அடைந்தனர். இதில் 1,771,000 ஓய்வெடுத்துக் கொண்ட தொழிலாளிகள், 1,706,259 தனியாக வாழ முடியாதவர்கள், தப்பிப் பிழைத்தவர்கள் அல்லது தொழிலாளர்கள். வேலையினின்றும் நீங்கிய தொழிலாளர்களுக்கு சராசரி மாதாந்திர பட்டுவாடா சுமார் 4,300 டாலர்களாகும்.

தன் சொந்த குற்றமில்லாத, தற்காலிகமாக வேலையில்லாதிருக்கும் வேலைக்காரர்களுக்கு ஒருசிறு வருமானத்தை யளிப்பதுதான் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தின் கொள்கையாகும். 1950-ல் தற்காலிகமாக வேலையில்லாதவர்களுக்கு சுமார் 373,400,000 டாலர்கள் செலுத்தப்பட்டது.

இத்திட்டத்திற்காக அரசாங்கத்திற்கு செலுத்தப்படும் வரி விதிப்பு, தொழிலாளர்களின் பொது நிதிப் பங்கு தேவைப்படும் இரண்டு நாடுகளைத் தவிற மற்ற எல்லா நாடுகளிலும் சம்பளப்பட்டி மூலம் சாத்தியமாகச் செய்யமுடிகிறது. 1950-ல் இந்த வரிவிதிப்பு 1.5 சத விகிதமாயிருந்தது. வருடத்திற்கு 3,600 டாலர்கள் சம்பாதிக்கும் ஒவ்வொரு தொழிலாளர்களிடத்தும் இது வசூல் செய்யப்படுகிறது.

எல்லா நாடுகளிலும், எட்டும் அதற்கு மேற்பட்டதுமான தொழில் கொடுக்கும் நபர்கள் இத்திட்டத்தில் சேர்ந்திருக்கி

ருர்கள். அநேக நாடுகளில் 6-ம் அதற்குக் குறைவானதுமான தொழிலாளர்களைக் கொண்டதாக இருக்கிறது. இத்திட்டத்திற்கான விதிநிர்மாணங்களையும், அதை நிர்வகித்து நடத்துவதினுல் சிலவாகும் தொகையையும் அந்தந்த நாடுகளை ஈடு செய்து கொள்ள, மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்கிறது. அரசாங்கம் இத்திட்டத்தை நிர்வகிக்கிறது.

மேற்கண்ட திட்டத்தினுல் நன்மையுருத நபர்களுக்கு அநேகவித வேறு பொதுநல உதவி சாதனங்கள் உள்ளன. வறுமையான ஏழை வயதானவர்களுக்கு 1950-ல் 1,485,000,000 டாலர்கள் கொடுக்கப்பட்டன. 48 நாடுகளிலும் பலதரப்பட்ட சராசரி மாதாந்திர பட்டுவாடா குறைந்தது 19·30 டாலர்களிலிருந்து 77.52 டாலர்கள்வரை ஒவ்வொரு நபருக்கும் கொடுக்கப்படுகிறது. நாடு முழுவதிலும் சராசரி ஒரு நபருக்கு மாதாந்திர பட்டுவாடா 43.31 டாலர்களாகும். ஏழைக் குருடர்களுக்குச் செலுத்தப்பட்டது 53,000,000 டாலர்கள். 1950 டிஸம்பரில் ஒவ்வொரு நபருக்கும் சராசரி மாதாந்திர பட்டுவாடா 47.72 டாலர்களாகும். 1950-ல் உதவித் திட்டத்தின்கீழ் சுயேச்சையாக வாழ முடியாத குழந்தைகளுக்கு 577,000,000 டாலர்கள் செலவு செய்யப்பட்டது. 1950 டிஸம்பரில் 640,000 குடும்பங்கள் இம்மாதிரி உதவியைப் பெற்றன. சராசரியாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் 72.61 டாலர்கள் சேர்ப்பிக்கப்பட்டது. வயதானவர்களின் பாதுகாப்பிற்கும் குருடர்களின் உதவிக்கும் அதிகபட்சமாக 50 டாலர்களும், முதல் குழந்தைக்கு அதிகபட்சம் 27 டாலர்களும், அதைத் தொடர்ந்திருக்கும் குழந்தைகளுக்கு 18 டாலர்களும், சக்தியில்லாத குழந்தைகளுக்கு பொதுநிதி உதவி கொடுக்கும் மத்திய சர்க்காரின் நிதி உதவியினுல் 48 நாடுகளும் இந்த திட்டத்தை நிர்வகிக்கின்றன. 27 டாலர்கள் வரை செலுத்தப்படும் மாதாந்திர தொகை, சக்தியில்லாத குழந்தைகளைப் பராமரித்து வரும் தாயாருக்கோ அல்லது நெருங்கிய உறவினர்களுக்கோ இப்பொழுது கொடுக்கப்பட்டு வருகிறது.

மேலே கண்ட திட்டங்கள் எதிலும் லாயக்கில்லாத நபர்களுக்கு அரசாங்கமோ, உள்நாட்டு ஸ்தாபனமோ அல்லது இரண்டுமோ உதவியளிக்கிறது. மத்திய அரசாங்கத்துக்கு சம்பந்தமில்லாதிருந்தபோதிலும் இப்பொழுது உதவிக்கு 1950-ல் 352,000,000 டாலர்கள் கொடுத்திருக்கிறது. 1950 டிஸம்பரில் இப்பொது உதவியை 395,000 குடும்பங்கள் சராசரி 46.59 டாலர்கள் வீதம் அடைந்தது.

1950 அக்டோபர் 1—ஆரம்பத்தில், சாசுவதமான முடவர்களுக்கு உதவி செய்வதற்கு, ஒரு புதுத் திட்டத்திற்கு முதலீடு செய்வதற்கான பொதுப்பணம் அரசாங்கத்திற்கு கிடைக்கக் கூடியதாக இருந்தது. வயதான ஜீவிதகால வாழ்க்கைக்கும், குருடர்களின் உதவிக்கும் பொதுப்பணத்திலிருந்து மாதம் ஒரு நபருக்கு 50 டாலர்களுக்கு மேற்படாத வீதாசாரக் கட்டுப்பாட்டிலிருக்கும். அநேக நாடுகளில் இத்திட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்து விட்டார்கள்.

1950-ல் மத்திய சர்க்காரால், சமஸ்தானங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது கீழ்க் கண்ட வகைகளில் :—தாய்மார்களுக்கும் குழந்தைகளின் க்ஷேமப் பாதுகாப்புக்கும் 16,500,000 டாலர்களும், முடமான குழந்தைகளுக்கு 15,000,000 டாலர்களும், குழந்தைகளின் பொது நல சேவைக்கு 10,000,000 டாலர்களுமாகும். இது 1950-ல் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டதாகும்.

எல்லா நாடுகளிலும் பொது வேலை தேடித்தரும் காரியாலயங்கள், தொழிலாளர்களுக்கு வேலை தேடித் தருவதில் உதவியாகவும், முதலாளிகளுக்கு தகுதியான தொழிலாளர்களை தேடிக் கொடுக்கவும் உதவியாக இருக்கிறது. இவைகளை நிர்வகிக்கும் செலவுகளை அப்பிரதேசங்களை ஈடு செய்துகொள்ள மத்திய சர்க்கார் உத்தரவிடுகிறது. வேலையில்லாத் திட்ட நிறைவேற்றத்துடன் இத்திட்டம் பூர்த்தியாகிறது.

1934-ல் அமெரிக்க காங்கிரஸினுல் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டதும், ஐக்கிய கடன் கொடுத்துதவும் ஸ்தாபனத்தினுல் ஆக்கப்பட்டதுமான, கடன் கொடுக்கும் ஸ்தாபனங்கள், உள்நாட்டு இயந்திரத் தொழிற்சாலையாளர்களுக்கும், ஒருவனின் பண்ணைக் கூட்டுறவுக்கும், அரசாங்க அலுவலங்களில் தொழில் செய்யும் வேலைக்காரர்களுக்கும் அல்லது வேறு எந்த தொகுதியாளர்களுக்கும் கடன் பத்திரங்களை வழங்குவதற்கும், ஸ்தாபனத்தின் இயக்கம் நல்ல முறையில் நடப்பதற்கும் மேற்பார்வையாளராக இருக்கிறது. இந்த ஸ்தாபன அங்கத்தினர்கள் கடன் கொடுப்பதற்கு தேவையான நிதிக்காக பங்குகளை வாங்குகிருர்கள்.

1950-ன் முடிவில் சுமார் **5,000** கடன் கொடுத்துதவும் சங்கங்கள் **406,000,000** டாலர் முதலுடன்கூட இருந்தது மத்தியப் புள்ளி விவரப்படி. அதற்கு சமமாக உள்ள சங்கங்கள் சமஸ்தானங்களிலும் இயங்கி வந்தது.

இத்திட்டங்களைத் தவிற இன்னும் அநேக திட்டங்கள் வேலையிலிருந்து ஓய்வெடுத்துக்கொண்டவர்களுக்கும் சக்தியில்லாதவர்களுக்கும் உபயோகமாக இருக்கிறது.

அமெரிக்க இருப்புப்பாதைத் தொழிலாளர்கள், வயதான காலத்தில் நிகழக்கூடிய ஆபத்துகள், சக்தியின்மை, வேலையின்மை, குடும்பத்தின் சம்பாதிக்கக் கூடிய நபர் இறந்து போவது முதலானவைகளைத் தடுத்து பலவற்றை உட்கொண்டுள்ள, புரியக்கூடிய, ஒரு அமைப்பு முறைத் திட்டத்தினுல் நன்மையடைகிருர்கள்.

தொழிலாளர், நோய் நொடியினுல் வேலைக்குப் போக முடியாமலும், வேலையிலிருக்கும் பொழுது தீங்குகள் ஏற்பட்டாலும் அதற்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்து தரும், ஈடு செய்யும் சட்டங்கள் எல்லா சமஸ்தானங்களிலும் உள்ளன.

மத்திய அரசாங்கத்தின் வேலைக்காரர்களில் அநேகரும், ராணுவத்தில் ஈடுபட்டவர்களும், ஓய்வு காலங்களில், வேலையி



"அமெரிக்கத் தொழிலாளர் உள்ளம்" எனப்படும் இந்தச் சிலை அமெரிக்கச் சிற்பி மாக்ஸ் காலிஷ் என்பவர் செய்தது. இவர் 1891 மார்ச்சு முதல் தேதி போலந்தில் பிறந்தவர்.

வேலை முடிந்து விடு திரும்பும் இவர்கள் ஓஹையோ ராஜ்யத்தில் மௌன்ட் வெர்னன் என்னுமிடத்திலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள். பலர் தொழிற்சாலைக்குத் தங்கள் கார்களில் செல்கிறார்கள். தொழிலாளர்கள் எல்லோரும் தொழிற் சங்கங்களில் சேர்ந்திருப்பவர்கள்.



நவீன கால அமெரிக்கச் சமையலறையில் மின்சாரம் மிகுதியாகப் பயன்படுகிறது ; சமைக்கவும், பண்டங்களைக் குளிர்ச்சியாக வைத்திருக்கவும், காற்று வசதி செய்யவும் மின்சாரம் பயன்படுகிறது. சமையல்களுக்கு வேண்டிய சாமான்களை டெலிபோனில் பேசியே வாங்கிக் கொள்ளலாம்.

லிருக்கும்பொழுது வேலே செய்ய சக்தியின்மை, இறந்துபோய் விட்டால் அதற்குரிய சலுகைகள், இது போன்ற இருபது வகை யான பாதுகாப்பு வசதிகளே அடைகிருர்கள். அநேக ராஜீய, உள் நாட்டு அரசாங்க சிப்பந்திகள் இவ்விதம் காப்பாற்றப்படுகின்றனர்.

அமெரிக்க ராணுவப் படையில் வேலே செய்யும் எல்லா ராணுவத்தினர்களுக்கும் கல்வி முதலான அநேக விதமான மேலே கண்ட சலுகைகளும் நடைமுறையிலிருக்கின்றன.

அநேக தனிப்பட்ட தொழிற் ஸ்தாபனங்கள் லெக்ஷக்கணக் கான தொழிலாளர்களுக்கு, நிர்வாகப் பிரதிநிதிகளுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் நடுவில் பிரேரேரிக்கப்பட்ட திட்டங் களின் கீழ் வகுக்கப்பட்ட நன்மைகளேக் கொண்டு பாதுகாப்பும், அபாயமற்ற சூழ்நிலேயையும் அளிக்கிறது. இத்திட்டங்கள், மத்திய அரசாங்கத்திலுைம், சமஸ்தானங்களிலுைம் புகுத்தப் பட்ட திட்டங்களேவிட அதிகமானது. இதன் நன்மைகள் வேறு விதமாக இருந்தபோதிலும் அதேமாதிரியான ஒரு திட்டம், நோயானவர்களுக்கும் எதிர்பாராத விபத்தில் சிக்கியவர்களுக் கும் வாரத்திற்கு 20 டாலர்கள் வீதம் சுமார் 15 வாரங்களுக்கு மேற்படாமலும், வைத்தியச் செலவுக்கு ஒரு நாள் ஒன்றுக்கு 7 டாலர்கள் வீதம் 31 நாட்களுக்கும், இரண சிகிச்சை ஆப ரேஷனுக்கு 150 டாலர்களும் கொடுக்க வசதியளிக்கிறது.

தொழில் நிர்வாகங்களினல் அதிகப்படியான உபகாரச் சம்பளங்கள் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சாதாரணமாக இதற்கு முன் மாதாந்திர உபகாரச் சம்பளம் 40லிருந்து 60 டாலர்களாக இருந்தது.

இன்று எப்படியிருந்தபோதிலும் தொழிற் சங்கங்கள் 100லிருந்து 120 டாலர்கள்வரை மாதாந்திரம் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் அதாவது உடன்படிக்கை செய்து வருகிறது. ஓய் வெடுத்துக்கொண்ட நிலக்கரிச்சுரங்கத்து வேலேயாளர்கள் மாதம் ஒன்றுக்கு ஏற்கனவேயே 100 டாலர்கள் உபகாரச் சம்பளமாக கம்பெனியினல் கொடுக்கப்பட்டு வருகிருர்கள்.

தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும்

அமெரிக்காவிலுள்ள தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களும் சமீப காலத்திற்குள் அதிசயிக்கத் தக்க முறையில் முன்னேறியிருப்பதாக கூறலாம். இப்பொழுது தொழிலாளி முன்பு பெற்றுவந்த ஊதியத்தைவிட அதிகமாகவும், சம்பாதிக்கும் பொருளுக்கு தேவைக்கும் அதிகமானவைகளை வாங்குகிறான். அமெரிக்க அரசாங்கம் தொழிலாளியின் நன்மைகளுக்காகச் சட்டங்கள் இயற்றி அதன்மூலம் அவர்கள் 1940க்கு பத்து வருடங்களுக்கு முன்பு அடைந்ததைவிட இப்பொழுது சங்கங்களின் வாயிலாக அதிகமான சலுகைகளைப் பெறுகிறார்கள்.

பதினெட்டாவது நூற்றாண்டின் கடைசியில் அமெரிக்க நாடுகளின் வியாபாரத் தொழிலியக்கச் சங்கம், பிலடெல்பியாவிலுள்ள தச்சு வேலை ஜோடுதைப்பவர்களின் பகுதிகளையும், நியூயார்க்கிலுள்ள அச்சுத் தொழிலாளர்களையும், பால்டிமோரிலுள்ள தையற்காரர்களையும்கொண்டு தன்னுடைய முன்னேற்றத்தில் மிகவும் மந்தமாயிருந்து வந்தது. இந்த ஆரம்ப மந்த முன்னேற்றம் பிறகு நிரந்தரமான மேம்பாட்டையும் வளர்ச்சியையுமடைய உற்சாகப்படுத்தியது. இன்றைய தினம் அமெரிக்காவின் தொழிற்சாலைகளிலும் பெரிய தொழிற் ஸ்தாபனங்களிலும் சுமார் 70,000 கிளைகளைக் கொண்ட 210 அமெரிக்கத் தொழிற் சங்கங்கள் உள்ளன.

தொழிற் சங்கங்கள் இன்றைய தினம், அநேக அமெரிக்க தொழிற் ஸ்தாபனங்களில் முக்கியமானதொரு பதவியை கைக்கொண்டிருக்கிறது. அமெரிக்க தொழிற் சங்கங்களுள் மிகப் பெரியதும் பழமையுமான அமெரிக்க ஐக்கிய தொழிற் சங்கம் (A. F. L.) 1881-ல் நிறுவப்பட்டது. இது 8,000,000 அங்கத்

தினர்களைக் கொண்ட 107 இணைப்புச் சங்கங்களுடன் சேர்த்து அமைக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது மிகப் பெரிய தொழிற்ஸ்தாபன பிரதிநிதிகளின் சங்கம், (C.I.O.) 1938-ல் நிறுவப்பட்டது. இது 5,000,000 அங்கத்தினர்களைக் கொண்ட 40 இணைப்புச் சங்கங்களுடன் சேர்த்து அமைக்கப் பட்டிருக்கிறது.

இருப்புப்பாதைத் தொழிலாளர்களும் இன்னும் 60 தெரிந்துகொள்ளக்கூடிய சுயேச்சை சங்கங்களும் கிட்டத்தட்ட 2,000,000 அங்கத்தினர்களைக்கொண்டதொரு தனி வகுப்பா யிருக்கிறது. 1,250,000 அங்கத்தினர்களைக்கொண்ட மோட்டார் தொழிலாளர்களின் இணைப்பு மிகப் பெரிய, தனித்த தொழிற் சங்கமாகும். இதைத் தவிற பல நாடுகள் சம்பந்தப்பட்ட மேஸ் திரித் தோழர்களும் எஃகு தொழிலாளர்களுமாக 1,000,000 க்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட இரண்டு தொழிற்சங்கங் களுமுள்ளன. இதையும் தவிற மரத்தச்சு வேலை செய்பவர் களும் இயந்திரமியக்குபவர்களும் சுரங்கத் தொழிலாளர்களுமாக 500,000க்கு மேற்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட தொழிற் சங்கங்களுமுள்ளன.

அமெரிக்கச் சட்டப்படி, தொழிலாளர்கள், 15,000,000 அமெரிக்கத் தொழிலாளர்களுள், சங்கங்களை நிறுவி திட்டம் வகுப்பதற்கு தன் இஷ்டப்படி தேர்ந்தெடுக்க அதிகாரமுண்டு. இவர்களில் மூன்றில் ஒரு பாகம், தொழிற் சங்கங்கள் இயங்கும் தொழிற் ஸ்தாபனங்களிலும், வியாபாரஸ்தலங்களிலும் உத்தி யோகத்திலிருக்கிறார்கள். இதன் மொத்தத்தில் 4,000,000 நபர்கள் ஸ்திரீகளாக இருக்கிறார்கள்.

தொழிலாளர்களின் வழக்கத்திலிருந்துவரும் சலுகை களுடன் சம்பள ஓய்வும், சம்பளத்துடன் விடுமுறையும், சுகா தாரப் பாதுகாப்புக்களும், வேலையில் இல்லாதபொழுது நோய், எதிர்பாரா விபத்து இவைகளினால் ஏற்படக்கூடிய கஷ்டங்களுக்கு

பாதுகாப்பும், வேலையினின்றும் நீங்கிய பிறகுள்ள சலுகைகளும் கிடைக்கின்றன.

1938-ல் பிரதிநிதி சபையினால் இயற்றப்பட்ட தொழிலாளர்கள் சட்டம், தொழிற்சாலைகள், சுரங்கங்களில் செய்யும் வேலை நேரத்தை **8** மணிக்கு மேல் அதாவது வாரத்திற்கு **40** மணி நேரத்திற்குமேல் தடுக்கிறது. அப்படி தொழிலாளர்களின் சேவை குறித்த நேரத்திற்கு மேல் தேவைப்படுமாயின் **1** மணி நேர வேலைக்கு **1½** மணி அதிகச் சம்பளம் **40**வது மணி நேர வேலைக்குப் பிறகு கொடுக்கப்படுகிறது.

ஸ்திரீகள்

அமெரிக்காவில் ஓட்டுரிமை உள்ளவர்களில் பாதிக்குமேல் ஸ்திரீகள். அவர்கள் சட்டப்படி எந்த பொது காரியாலயத்தையும் நடத்தலாம்.

அமெரிக்க காங்கிரஸில் 50 பெண்களுக்கு மேல் சேவை செய்திருக்கிருர்கள். இரண்டு ஸ்திரீகள் நாட்டின் கவர்னராகவும், ஒருவர் ஜனதிபதியின் அந்தரங்கசபை அங்கத்தினராகவுமிருந்திருக்கிருர். எட்டு ஸ்திரீகள் பிரதிநிதி சபையிலும், ஒருவர் அமெரிக்க எண்பத்தி இரண்டாவது காங்கிரஸ் நிர்வாக சபையிலும் சேவை செய்து வருகிருர்.

1951-ல் ராஜீய சட்ட சபைகளில் சுமார் 235 ஸ்திரீகளும் இன்னும் இதர முக்கியமான அரசாங்கப் பதவிகளிலும் சேவை செய்திருக்கிருர்கள்.

1950, 51-ல் பள்ளிக்குரிய வருடங்களில் அமெரிக்க கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் 727,000 பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அமெரிக்கக்கல்லூரி பட்டதாரிகளில் நாற்பத்தைந்து சதவிகிதம் ஸ்திரீகளாக யிருக்கிருர்கள்.

அமெரிக்க நாடுகளில், ஸ்திரீகள் சராசரி 21 லிருந்து 22 வயதிற்குள் மணம் செய்து கொள்ளுகிருர்கள். சிறந்த முறையிலிருக்கிற தாய் ஒருவளுக்கு மூன்று குழந்தைகள் உள்ளன. தாயாருக்கு 28 வயதாகுமுன் அந்தக் குழந்தைகளுள் கடைசி, பிறந்துவிடுகிறது.

சில அமெரிக்கக் குடும்பங்கள் வீட்டு வேலைக்காக வேலைக்காரர்களை உபயோகப்படுத்திக்கொள்ளுகிருர்கள். பெரும்பாலும் வீட்டு வேலைகளை வீட்டின் தலைவியே செய்கிருள். அமெரிக்கா

வில் **43,000,000** குடும்பங்களும் சுமார் **1,700,000** வீட்டிற்குரிய வேலைக்காரர்களுமிருக்கிறார்கள்.

அமெரிக்கச் சிறுவர்களும், சிறுமிகளும் அவர்களுடைய குழந்தைப் பருவத்தில் நீந்துவது, வழுக்கிச் செல்வது, பனிக் கட்டி தளத்தின்மீது மரப் பாதரக்ஷையை உபயோகப் படுத்திச் செல்வது, பேஸ் பந்து விளையாட்டு, டென்னிஸ் பந்து விளையாட்டு, கோல்ப் என்ற பந்தாட்டம், தண்ணீரில் கப்பல் செலுத்துவது, கால் நடையாக உலாவுதல், முகாம் போடுதல் முதலானவைகளை செய்கிறார்கள்.

ஸ்திரீகளுக்கு தனிப்பட்ட பெண்கள் சாரண ஸ்தாபனங்களும், யுவ ஸ்திரீகள் கிறிஸ்தவ ஸ்தாபனங்களும் இருக்கின்றன. ஆண்களுக்கும் இவர்களுக்கு ஒப்பான ஆண்கள் சாரண ஸ்தாபனங்களும், யுவர்கள் கிறிஸ்தவ சங்கங்களுமிருக்கின்றன.

பண்ணை விவசாயப் பிரதேசங்களில் **1,800,000** சிறுவர்களும் சிறுமியர்களும் கூடி வீடு கட்டுவது, விவசாயம், வசிப்பதற்குரிய முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஒரு யுவனோ அல்லது யுவதியோ பசு, பன்றி அல்லது ஆடு இவைகளின் வளர்ப்பை உயர்த்துவதினாலோ, அல்லது நேர்த்தியான காய்கறிகள் உண்டு செய்வதினாலோ, தேசீயப் பரிசை ஜெயிப்பதற்கு ஒருவரையொருவர் சமமாகப் போட்டியிடுகின்றனர்.

ஆரம்பக் கல்லூரிகளைவிட உயர்தரமான படிப்பு முடிந்தவுடன் அமெரிக்கப் பெண் ஒருவள், ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கும் கல்லூரியிலோ அல்லது கலாசாலையிலோ, அல்லது முழுவதும் பெண்களுக்குரிய கல்லூரியிலோ சேர்ந்து படிக்கலாம்.

அவளுடைய வாழ்க்கைத் தொழிலுக்குத் தகுந்தபடி கல்வி கற்பிக்கும் முறையையோ, அல்லது ரசாயன நூல், சட்டம், இயந்

திரத் தொழில், பௌதிக நூல், சங்கீதம், வைத்தியம், கணக்கு வரவு செலவையோ, தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

சமூகத்தில் ஆண்களுக்குள்ள பதவிநிலைக்கு சமமாக ஒவ்வொரு வருடமும் பெண்களும் மேற்கொள்ளுகிறார்கள்.

19,000,000க்கு மேற்பட்ட ஸ்திரீகள் அமெரிக்க தொழில் தொகுதி சைனியத்திலிருக்கிறார்கள். இதில் சுமார் பாதிக்கு மேல் விவாகமானவர்கள். அவர்கள் இந்த ராணுவ சம்பந்த மில்லாத தொழில் சைனியத்தில் **31** சத விகிதம் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

சுமார் **49,000,000** ஸ்திரீகள் குமாஸ்தா உத்தியோகத்தி லும், **3,700,000** ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும், தாதி மார், உபாத்தியாயினி இதுபோன்ற உத்தியோகத்தில் **1,784,000** ஸ்திரீகளும், பண்ணை நிர்வகிப்பு, தொழில்களில் **813,000**, வியாபாரப் பெண்களாக **1,264,000** ஸ்திரீகளுமிருக்கி றார்கள்.

ஸ்திரீகள் சொந்தமாக ஒப்பந்தங்களில் ஈடுபட்டு சொந்த வியாபாரங்கள் செய்யலாம். ஸ்திரீகள் தங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் அறிந்து தங்களுக்காகவும் பொது நலத்திற் கான பொறுப்புக்களை ஏற்பதில் பொதுஜன அபிப்பிராயம் மிகுந்த ஆதரவளிக்கிறது.

அமெரிக்காவிலுள்ள பெரும்பாலான ஸ்திரீகள் வீட்டுத் தொழிலிலும் வேலையிலும் ஒரே சமயத்தில் ஈடு படுகிறார்கள். விதவையாகவோ, தனியாகவோ, அல்லது விவாக ரத்து செய் யப்பட்டதாலோ உள்ள நாலில் ஒரு பங்கு ஸ்திரீகளுக்கு உள்ள குழந்தைகளை அவர்கள் ரக்ஷிக்கவேண்டும்.

தொழிலில் இருக்கும் மொத்த ஸ்திரீகளில் **52** சத விகித மணமானவர்களில் சிலர், குடும்ப வருமானத்தை அதிகப் படுத்துவதற்கும், தங்கள் குழந்தைகளின் பல்கலைக்கழகக் கல்வி

கட்டணங்களைச் செலுத்துமுதவிக்காகவும், பயிற்சி அளிக்கப்பட்ட தொழிலில் சேவை புரிவதற்குமாக ஈடு செய்கிறார்கள்.

அமெரிக்காவில் ஒரு சமூகத்திலும் சேராத ஸ்திரீகள் வெகு சிலரே உள்ளனர். கிறிஸ்தவச் சங்கங்களின் மூலமாக தங்கள் ஐக்கிய முன்னணியின் பலத்தை முதலில் தெரிந்து கொண்டார்கள். இந்தத் தொகுப்புகளிலிருந்து அவர்களின் மற்ற உபகாரச்சேவை சங்கங்கள் தோன்றலாயின. இன்று சர்வ தேச இணைப்புகள் கொண்ட சமூக, ராஜீய பொறுப்புகள் அதிகமாக உணர்வதை குறிக்கோளாகக் கொண்டுள்ள பல சங்கங்கள் ஸ்திரீகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் சில, ஸ்திரீகளின் பொது ஐக்கிய சங்கங்கள், வாக்காளர் சங்கங்கள், தொழிற் கூட்டுறவு சங்கங்களாக உள்ளன. வியாபாரம், தொழில் இவைகளில் ஈடுபட்ட ஸ்திரீகளினால் தங்களுக்காக ஏற் படுத்திக்கொண்ட சங்கங்கள் அவர்களின் பொருளாதார நிலை மையை அபிவிருத்தி செய்வதற்கும், அவர்களுடைய நிலையை மதிப்புடன் உயர்த்திக் கொள்வதற்கும், சமூக சேவையில் அதிக ஊக்கத்துடன் பங்கெடுத்துக்கொள்வதற்கும் உதவியா யுள்ளன.

உலக விஷயங்களிலும் பிரச்னைகளிலும் அமெரிக்க ஸ்திரீ சங்கங்கள் அதிகமான முயற்சியுள்ள கவனம் செலுத்துகின்றன.

மதம்

அமெரிக்காவின் இன்றைய கிறிஸ்தவ ஆலய அங்கத்தினர்கள் 82,000,000 நபர்களுக்கும் மேற்பட்டது. இன்னும் அநேக லெட்சம் குழந்தைகள் ஞாயிறு பள்ளிக்கூடங்களுக்குப் போகிறார்கள்.

அமெரிக்காவில் மத ஸ்தாபனங்களை ஆதரிப்பது சுயேச்சையாக இருக்கிறது. அரசாங்கம் கிறிஸ்தவ ஆலயங்களுக்கு நிதி உதவி செய்வதில்லை. அரசாங்கத்தையும், ஆலயத்தையும் தனிப்படப் பிரிப்பது அமெரிக்க தத்துவத்தின் அடிப்படையான கொள்கை.

அமெரிக்காவில் 254,000 கிறிஸ்தவ ஆலயங்களும் 256 மதப் பிரிவுகளுமுள்ளன. எல்லா மதத்தினர்களும், எல்லா வயதினர்களும் தான் நிலைநாட்டிய வழிகளைப் பின்பற்றி தன்னுடைய பின்பற்றுபவர்களையும், அரசாங்கத்தின் தலையிடுதலோ, கட்டுப்பாடோ இல்லாமலும் செய்திருக்கிறார்கள்.

அமெரிக்க ஆலயங்களில் வழக்கமாக நடத்தப்படும் தொழுதல், அவர்களுடைய சித்தாந்தங்களைக் கற்பித்தல் இவைகளைத்தவிர இன்னும் அநேகவித நிகழ்ச்சிகளுமுள்ளன. சமூக சாதி நடவடிக்கைகளுக்கு இவ்விடங்கள் முக்கியமான மையம். இவைகளில் படிப்பதற்கும், சேவை புரிவதற்கும், தோழமைக்கும், பொழுது போக்குக்குமான திட்டங்கள் ஆண், பெண், சிறுவர்கள் குழந்தைகளுக்கு உண்டு.

பிராடஸ்டண்டு, ரோமாபுரிக்குரிய விரிந்த நோக்கமுள்ளவன், யூதர்களின் மதசமூகச் சங்கங்கள் முக்கியமானவைகளாக இருக்கின்றன. பிராடஸ்டண்டு மத ஆலயங்களின் அங்கத்தினர்கள் சுமார் 48,000,000, ரோமன் கதோலிக் ஆலய அங்கத்தினர்கள் 28,000,000, யூதர்களின் சேர்க்கை 5,000,000 ஆக இருக்கிறது.

அமெரிக்காவின் இதரமதக் கூட்டத்தினருள், ரஷிய, கிரேக்க, போலந்து நாட்டிற்குரிய சமூக கதோலிக், கிழக்கு செர்பியா, அமெரிக்க புத்த மதத்தினர், உக்ரேனிய, சிரிய ஆன்டியோசியன், இன்னும் உலகத்தில் உண்மையெனகொள்ளக்கூடிய அநேக மதக் கூட்டத்தினர்களின் சிலரும் குறிப்பிடத்தக்கப்படியிருக்கின்றனர்.

ஒவ்வொரு அமெரிக்கரும், அவனுடைய அல்லது அவளுடைய இஷ்டப்படி தனது கிறிஸ்தவ ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து, மத நம்பிக்கையுடன் தொழுவதற்கும் தனது மனச் சாட்சிக்கு நேர்மையான முறையில் நடந்துகொள்வதற்குமான சுதந்திரத்தை அமெரிக்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றன. அரசாங்க ஆட்சிமுறை ஏற்பாட்டின் முதல் சீர்திருத்தத்தில் கூறப்பட்டுள்ளதாவது :—

" மதஸ்தாபன சம்பந்தமுள்ள சங்கங்களை ஸ்தாபித்தலிலும் அதன் சுயேச்சையான பயிற்சியளிப்பதுபற்றியும் காங்கிரஸ் எந்தவிதமான சட்டங்களையும் செய்யாது " என்பதுதான்.

நடைமுதலில் இதேவிதமான கட்டுப்பாடு 48 சமஸ்தானங்களிலும், ஒரே மாதிரியாக சட்ட ஷரத்துகள், நியாயத்திற்குரிய அபிப்பிராயங்களிலும் சுமத்தப்பட்டிருக்கிறது.

அநேக பெரிய பல்கலைக் கழகங்களிலும், பிரத்தியேகமான மத சம்பந்தமாய் உள்ள கல்லூரிகளிலும், கடவுளுக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தங்கள் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகின்றன. இம் மத சம்பந்தமாய் வருடத்திற்கு சராசரியாக 15,000 மாணக்கர்கள் அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இதில் சுமார் 1,000 பெண்கள்.

பிராடஸ்டன்டு, ரோமன் கதோலிக் ஆலயங்களிலும், யூதர்களின் மத சபைக் கூட்டங்களிலும் சிறு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மதப் படிப்பு சம்பந்தமான தொகுதிகள் உள்ளன.

சுமார் **2,000** அமெரிக்க சமூகங்களில், பள்ளிக்கூட மாணுக்கர்கள் சுயேச்சையான மதப் பயிற்சி பெறுவதற்காக ஒவ்வொரு வாரமும் சில மணி நேரங்கள் வகுப்பினின்றும் விடுவிக்கப் படுகிருர்கள்.

அமெரிக்காவில், அமெரிக்க பைபிள் (வேத நூல்) சங்கத்தின் **1950**-வது வருடத்திய தஸ்தவேஜுகளில் உள்ளபடி அதிகமான அளவில் விறகக்கூடிய புத்தகம் " பைபிள் "தான்.

சங்கீதம், நூல்கள், கலை
கலைக்கூடம்

அமெரிக்காவில் சுமார் 550 இன்னிசைக் கருவிகள் இருக்கின்றன. 80லிருந்து 110 இசை வல்லுனர்கள் 25 மிகப் பெரிய இன்னிசைக் கருவிகளை தனித்தனியாகக் கையாளுகிருர்கள். மொத்தத்தில் இந்த 550 இசைக் கருவிகளினுல் ஒவ்வொரு சங்கீத விழாக் காலங்களிலும் 10,000க்கு மேற்பட்ட கச்சேரிகள் செய்யப்படுகின்றன.

இதைத் தவிற கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும், பள்ளிக்கூடங்களிலும் சுமார் 35,000 இசைக் கருவிகளிருக்கின்றன.

இருபதிற்கு மேற்பட்ட நாடகக் குழுவினர்கள், மேன்மையானதும் உற்சாகமூட்டுவதுமான நாடகங்களை நடிக்கிருர்கள். சில நூற்றுக் கணக்கான சுற்றுப் பிரயாணம் செய்யும் கம்பெனிகள், நாடகம், சங்கீதக் கச்சேரிகள், நடன கோஷ்டிகள், பிரசித்திபெற்ற இசைகள், இவைகளை நகரங்களுக்கும், பட்டிணங்களுக்கும் கொணர்ந்து செயலில் காட்டுகிருர்கள். ஒவ்வொரு வருடமும் சுமார் 30,000,000 பிரவேசச் சீட்டுகள் சங்கீதக் கச்சேரிகளுக்கும் நடன விழாவிற்குமாக விற்கப்படுகின்றன.

மாரி காலத்தின் ஒவ்வொரு சனிக்கிழமை பிற்பகலிலும் நியூயார்க், தலைநகரின் இசைக்குழு ஒலிபரப்பை 12,000,000 நபர்கள் ரஸிப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருடமும் பொதுக் கல்வி நிலைய மாணவர்களில் சுமார் 3,000,100 பேர்கள் இசைக் கருவி சங்கீதத்திலும் 3,000,000 மாணவர்கள் வாய்ப்பாட்டிலும் பயிற்சி பெறுகிருர்கள்.

ஏறக்குறைய 7,500 இலவச பொது நூல் நிலையங்களி லிருந்து அமெரிக்கர்களுக்கு, சுமார் 135,000,000 புத்தகங்கள் எளிதில் கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

ஒவ்வொரு 21,000 ஆண், பெண், குழந்தைகளுக்கும் இம்மாதிரியானதொரு இலவச பொது நூல் நிலையமிருக்கிறது. இந்த நூல் நிலையங்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் சுமார் 350,000,000 புத்தகங்கள் இரவலாக வாங்கி படிக்கப்படுகின்றன. இதற்கும் கூடுதலாக 1,808 கல்லூரி கலாசாலை நூல் நிலையங் களிலிருந்து 95,000,000 புத்தகங்கள் கிடைக்கக்கூடியதாயிருக் கின்றன. அமெரிக்காவில் சென்ற பத்தாண்டுகளுக்குள் புத்தக வியாபாரம் மிகவும் அதிகரித்திருக்கிறது. 1950-ல், 11,022 புதுப் புத்தகங்களும் நூற் பதிப்புகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன.

பெரிய நகரங்களிலுள்ள அநேக நூல் நிலையங்களில் உயர்தரமானதும் நவீனமானதுமான சங்கீத ஒலிபதிப்பித்த இசைத் தட்டுகள் கடனுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. சில புத்தக சாலைகள் குருடர்களுக்கான பதிப்புகளையும் சித்திரப் படக் கல்விகளையும், சலனப்படக் கல்விகளையும் அளிக்கின்றன. பல புத்தக சாலைகள் தூரத்திலுள்ள வாசகர்களுக்கு மெயில் அல்லது மோட்டார் வண்டியின் மூலமாக “யாத்திரீக புத்த காலயங்கள்” என குறிக்கப்பட்டு புத்தகங்களை அனுப்பி வருகின் றன. அமெரிக்காவில் 60,000க்குமேற்பட்ட சைத்ரீகர்களும், சிற்பிகளும் மற்ற கலைஞர்களும் உள்ளனர். குறைந்தபட்சம் 200,000 மாணவர்கள் 565 கலைப்பள்ளிக்கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள்.

அமெரிக்கர்கள் 400க்கு மேற்பட்ட கலைக் கூடங்களையும் பொருட் காட்சிசாலைகளையும் பார்வையிடுகிறார்கள். இவைகளில் அதிகமானவைகள் சிறியதான சமூகங்களிலுள்ளவை.

கலைப் பொருட்காட்சிகூடங்கள் பெரிய நகரங்களில் (அதாவது) வாஷிங்டன் நகரத்திலுள்ள தேசீயக் கலைக்கூடமும், கோர்காரன் கலைக்கூடமும், நியூயார்க்கிலுள்ள மெட்ரோபலிடன் கலைப் பொருட்காட்சி சாலையும் நவீன கலைக் கண்காட்சி சாலையும்,

பாஸ்டன் நுட்பக் கலை கண்காட்சி சாலையும், சிகாகோவின் கலைக்கூடத்தையும் குறிக்கின்றன.

மெட்ரோபலிடன் கலைக்கண்காட்சி சாலையின் சேமிப்புகள் மிகவும் உன்னதமானது. எல்லாக் கலைக்கூடங்களும் கலை முன்னேற்றத்தை அதிகரிக்க கல்வி திட்டங்களை வகுக்கின்றன. அவைகள் இலவச சொற்பொழிவுகளையும் பிரத்யேகமான கண் காட்சி சாலைகளையும் ஏற்படுத்துகின்றன. இவைகளில் அதிக மானவை யாத்திரிய கண்காட்சிப் பொருள்களாக சிறிய நகரங் களுக்கும் பட்டிணங்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

நியூயார்க் நகரம் நாடக அரங்கங்களுக்கு மையமான இடம். இங்கு **250**ல் **35** பெரிய வியாபார நாடக அரங்கங்கள் உள்ளன. இவைகளெல்லாம் நாடு முழுவதும் தொழில் நிகழ்ச்சிகளையே அளிக்கின்றன. மாரி காலத்தில் கிட்டத்தட்ட **30,000** நபர்கள் நியூ யார்க் நகரத்தின் நாடக அரங்கங்களுக்கு விஜயம் செய்கிறார்கள்.

பெரிய நகரங்களில் மாரிகால நிகழ்ச்சிகள் முடிவடைந்த வுடன், வசந்தகால விழா நிகழ்ச்சிகளுக்கான புதிய அபிவிருத்தி வளர்ச்சியடைந்து கடற்கரை பிரதேசங்களிலும் கிராமாந்திரப் பகுதிகளிலும் இயங்கி வருகிறது. இவைகளில் **150**க்கு மேற் பட்டவைகள் நாடு முழுவதும் புதிய பெருங் கூட்டங்களுக்கு பிரசித்திபெற்ற நடிக, நடிகைகளைக் காண அனுமதிக்கிறது, அதே சமயத்தில் இவர்கள், அனுபவமிக்க நடிகர்களாலும், மேற்பார்வையாளர்களாலும் பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்க ளுக்கு நடிக்கும் சந்தர்பத்தை அளிக்கிறார்கள்.

அமெரிக்காவில் இம்மாதிரியான தொழிற் கூடங்களைத் தவிற, **210,000** அரங்கங்கள், பொழுது போக்காக கலை பயின்ற வர்களும் அரைகுறையான நடிகர்களாலும் உண்டு செய்யப் பட்ட காட்சிகளை காட்டுகின்றன. இவைகள் கிராமாந்திரங்கள், சிறிய பட்டிணங்கள், கலாசாலை, பள்ளிக்கூடங்கள், வியாபார ஐக்கிய மண்டபங்கள் இன்னும் பலதரப்பட்ட சமூக நிர்வாக கேந்திரங்களிலும் உள்ளன.

பொழுதுபோக்கு

1920-ல் அமெரிக்காவில் வாரத்திற்கு சராசரி 50 மணி நேர வேலையாக இருந்தது. இப்பொழுது 40 மணி நேரமாகி விட்டது. அமெரிக்கர்களுக்கு இவ்விதமாக பொழுது போக்குவதற்கு அதிகமான அவகாசம் இருக்கிறது.

லெட்சக்கணக்கான அமெரிக்கர்கள் விளையாட்டுகளில் பங்கெடுத்துக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது 2,000,000லிருந்து 3,000,000 அமெரிக்கர்கள் நாடு முழுவதிலும் "பௌல்" என்ற பந்து விளையாட்டிற்குரிய வழவழப்பான மரங்களினால் தரையாக்கப்பட்ட நீளமான குறுகிய இடங்களில் பந்தை எறிந்து அதற்காக வைக்கப்பட்டிருக்கும் மரக்கட்டைகளை தாக்குகிறார்கள்.

போட்டியில்லா விளையாட்டுகளுள், மீன் பிடித்தல் தலைசிறந்ததாயிருக்கிறது. 1948-49-ம் வருடத்தில் 15,478,570 மீன் பிடிக்கும் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டன. அதே வருடங்களுக்கு வேட்டையாட வழங்கப்பட்ட அனுமதிச் சீட்டுகள் 12,500,000.

இதர விரும்பத்தக்க விளையாட்டுகளுள் குறிப்பாக, டென்னிஸ், பெரியதான மிருதுவாயிருக்கும் பந்தாட்டம், வில்வித்தை, ஒரு சிறிய பந்தை சுவர்மீது கையினால் விட்டெறியும் பந்து விளையாட்டு, பனிக்கட்டியில் சருக்குதல், 30 அல்லது 40 அடிகளுக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருக்கும் ஒரு இரும்புக் கம்பியில் குதிரை லாடத்தையோ, அல்லது அதன் உருவத்திலிருக்கும் எதையோ, தூக்கி எறிந்து அந்த இரும்புக் கம்பத்தில் போய் சுற்றிக்கொள்ளும் விளையாட்டு, பனிக்கட்டி தளத்தின்மீது செல்ல உதவும் ஒருவித சக்கரமில்லாத வண்டியில் செல்வது, கப்பல் செலுத்துவது, மோட்டார் என்ஜின் உள்ள படகுகளில் செல்வது, ஒரு வழவழப்பான மேஜையின்மீதோ, பலகைமீதோ அல்லது

வேறு எதிலாவது, மெல்லிய வட்டமான தட்டைக் காய்களை வைத்துக்கொண்டு கைவிரல்களினுலாவது அல்லது வேறு ஏதாவது கனமான வஸ்துக்களால் அக்காய்களைத் தட்டிவிட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தை நோக்கி அடிக்கும் விளையாட்டு, நீந்துவது போன்ற விளையாட்டுகள் உள்ளன.

நாடு முழுவதும், உள்நாட்டு அரசாங்கங்கள், விளையாட்டு மைதானங்கள், உட்புறத்திற்குரிய பொழுது போக்குமிடங்கள், நீந்தும் குளங்கள், இன்னும் இதர சௌகரியங்களும் செய்து கொடுக்கின்றன. அங்கு ஒவ்வொரு வாரமும் மொத்த ஜனங்களும் விதவிதமான பொழுது போக்குக்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளலாம்.

அமெரிக்கர்கள் விளையாட்டுகளில் கவனமாயிருப்பதுடன் அதில் பங்கெடுத்துக்கொள்வதிலும் விருப்பமுள்ளவர்களா யிருக்கிருர்கள். ஒவ்வொரு வருடத்திலும் அவர்கள் விளையாட்டு நிகழ்ச்சிக்கு சுமார் **500,000,000** பிரவேசச் சீட்டுகளை வாங்குகிருர்கள். அதாவது தலைக்கு மூன்று சீட்டுகளுக்கு மேல் வாங்குகிருர்கள்.

" பாஸ்கட் பால் " என்ற ஒருவித பந்து விளையாட்டு மிகவும் பிரபலமான கண்காட்சி விளையாட்டாக இருக்கிறது. இதற்கு **1947-48**-ல் சுமார் **75,000,000**க்கு மேல் வசூலாகியிருந்தது.

இப்பந்தாட்டம் " அமெரிக்காவின் பெரிய விளையாட்டு " என அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. **1949**-ல் **16** பிரதானமான கட்சிகளின் விளையாட்டுகள் **20,324,987** சபையோர்களை வசீகரித்தது. இன்னும் அநேக லெட்சம் ஜனங்கள் சிறிய போட்டிகளைப் பார்வையிட்டனர். கால் பந்து, குத்துச் சண்டை, குதிரை சவாரி முதலியன அடுத்தபடியாக விரும்பப்படும் விளையாட்டுகள்.

இதைத் தவிற கணக்கில் சேராத அளவிடமுடியாத எண்ணிக்கையுள்ள நபர்கள் வருட முழுவதும் மென்மையான பந்தாட்டம், பேஸ் பால், கால் பந்து, பாஸ்கட் பால் என்ற பந்து

விளையாட்டு இன்னும் சுற்றுப்புற மைதானங்களிலும், விளையாட்டு நிலங்களிலும், தொழில் விளையாட்டு மைதானங்களிலும், பள்ளிக்கூட கட்டிடங்களிலும் நடக்கும் போட்டிவிளையாட்டுகளைப் பார்க்கிறார்கள்.

திறமையானதும், கல்வி சம்பந்தமான பொழுதுபோக்கு திட்டம் 10,000,000 அமெரிக்க பெண்மணிகளுக்கு ஊக்கமளிக்கிறது, 7,000,000 ஆண்களுக்கும் 2,000,000 குழந்தைகளுக்கும் பொழுதுபோக்காக இருக்கிறது. தையல் வேலை, புகைப்படம் பிடித்தல், தபால் தலைகள் சேகரிப்பது, இவைகள் முக்கியமாக இருக்கின்றன. இதைத் தவிர இதர வகைகளாவன :—மர வேலை, பொம்மை செய்வது, சாயம் பூசுதல், உருவம் அமைப்பது, பற்பல கலைத்திறன்களையும் கைத்தொழில்களையும் சேகரிப்பது முதலியன. அமெரிக்காவில் ஒருவருக்கொருவர் செய்தி அனுப்பிக்கொண்டும், பிற நாடுகளிலுள்ளவர்களுக்கும் செய்தி அனுப்பிக்கொண்டு சுமார் 80,000 பொழுது போக்கு ஒலிபரப்பும் நபர்களிருக்கிறார்கள்.

அநேகமாக எல்லா அமெரிக்கர்களுக்கும் ஒலிபரப்பைக் கேட்பதும், சலனப் படங்களைப் பார்ப்பதும், தூரத்துப் பொருள்களைப் பார்ப்பதுமான பொழுதுபோக்கு முறைகள் வழக்கத்திலிருக்கிறது.

சம்பளத்துடன் இரண்டு வார லீவு நாடு முழுவதும் பரந்து இருப்பதால், அமெரிக்கர்களுக்கு தன்னுடைய குடும்ப மோட்டார் வண்டியிலேயே பிரயாணம் செய்வது பெரிய உல்லாசப் பொழுது சாதனமாயிருக்கிறது.

சுமார் 32,000,000 ஜனங்கள், பொது சௌகரியங்களை உபயோகப்படுத்திக்கொண்டு முகாம் போடுவது, மீன் பிடிப்பது, நீந்துவது, உலாவுவது போன்றவைகளுக்காக 25 தேசீய நந்தவனங்களுக்கு ஒவ்வொரு வருடமும் விஜயம் செய்கிறார்கள். 10,000,000 நபர்களுக்கு மேல் சமஸ்தானங்களினால் நிர்வகிக்கப்படும் நந்தவனங்களுக்கு விஜயம் செய்கிறார்கள்.

1948-ல் **300,000** அமெரிக்கர்களும், **1949**-ல் **260,000** அமெரிக்கர்களும் உல்லாஸ பொழுதுபோக்குக்காக ஐரோப்பா விற்கு பிரயாணம் செய்தார்கள். இன்னும் ஆயிரக் கணக்கான அமெரிக்கர்கள் விடுமுறையை கனடாவிலும் மத்திய தெற்கு அமெரிக்காவிலும் கழித்தார்கள்.

தொழில் உற்பத்திகள்

அமெரிக்காவில் **1951**-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சுமார் **16,022,000** ஜனங்கள், உற்பத்தி ஸ்தாபனங்களில் வேலைக்கமர்ந் திருந்தார்கள். இவர்களில் **13,197,000** நபர்கள் ஆலைகளிலும், உற்பத்தி செய்வதிலும் ஈடுபட்டவர்கள். மிகுதியுள்ளவர்கள் நிர்வாகத்திலும், குமாஸ்தா, கணக்கு வேலை, வியாபாரம் செய்வது போன்றவைகளில் உடன்பட்டிருந்தார்கள்.

அதிக தொழிலாளர்களைக்கொண்ட பெரிய ஸ்தாபனங்கள் கீழே கண்டவைகள்தான் :—போக்கு வரவு ஸ்தாபனம் **1,259,000**, இயந்திர தொழிற்சாலை **1,228,000**, நெசவு ஆலை கள் **1,227,000**, முக்கியமான உலோக தொழிற்சாலைகள் **1,158,000**, உணவுப் பொருள்கள் உற்பத்தியில் **1,097,000** தொழிலாளர்களையும் கொண்டதாக இருக்கிறது.

இன்னும் அநேக தொழிலாளர்கள் கீழ்க்கண்ட கைத் தொழிலிலீடுபட்டிருக்கிறார்கள் :

மர வேலை, உறுதிப்பாடான வேலைகளில் **154,000** நபர்க ளும், ரசாயன சம்பந்தம் இளக்கமான உருவாக்கத் தக்க பிளாஸ்டிக் தொழிலில் **106,500** நபர்களும், கல், மண், கண்ணாடி உற்பத்தித் தொழிலில் **115,600** நபர்களுமாவர்.

எண்ணிக்கை குறைவான தனிப்பட்ட வியாபாரஸ்தலம், ஆலை கள், அதிகமான உற்பத்திப் பொருள்களைத் தயார் செய்து வருகிறது. இவைகள், இரும்பு, எஃகுப்பொருள்கள், தானாகி இயங்கும் மோட்டார் வண்டி, பூமியினின்றும் வெட்டியெடுக்கப் படும் மண்ணெண்ணெயை சுத்தம் செய்வது, இருப்புப்பாதை நீராவி எஞ்சின் சாதனங்கள், ஆகாய விமானம், இயந்திரங்கள், ரப்பர் பொருள்கள், புகையிலை வஸ்துக்களைக் குறிக்கிறது.

உற்பத்திப் பொருள்களின் கணக்கு **1939**-ல் இருந்ததை விட **1950**-ல் **94** சதவிகிதமாக ஏறியிருக்கிறது.

செய்தி ஸ்தாபனம்

அமெரிக்காவின் பெரும்பாலான செய்திஸ்தாபன வசதி களுள் குறிப்பிடத்தக்கபடி உள்ளது தபால் முறை, டெலி போன், தந்தி, ஒலிபரப்பு.

தேசீய சர்க்காரின் ஒரு பிரிவான தபால் இலாகாவினுல் தபால் முறையமைப்பு இயங்குகிறது. இதற்கு பட்டுவாடா செய்யப்படும் தபால் வண்டிகளை இயக்குவதற்கு 10,000 நபர் களும் தபாலாபீஸ்களில் வேலை பார்ப்பவர்கள் 42,000 ஆக 50,000-க்கு மேலிருக்கிறுர்கள். இவ்விலாகா ஒவ்வொரு வருட மும் 43,000,000,000 தபால்களை கையாளுகிறது. அதாவது ஒரு நாளைக்கு 115,000,000 தபால்கள். இது அமெரிக்காவில் ஒரு நபருக்கு ஒரு வருடத்திற்கு 280 தபால்களுக்கு சமமாக இருக்கிறது.

அமெரிக்காவில் 43,000,000 டெலிபோன்களுக்கு மேலிருக் கின்றன. அதாவது நாலு நபருக்கு ஒன்று வீதமிருக்கிறது. 1950-ல் ஒவ்வொரு தொழிற்குரிய தினத்திலும் சுமாராக 150,000,000 டெலிபோன் அழைப்புகளுக்கு மேல் கூப்பிடப் பட்டிருக்கின்றன.

டெலிபோன், இருப்புப்பாதை, வசதிகளைக் காட்டிலும் இந் நாட்டில் 30,000 தந்தி ஆபீஸ்கள் இருக்கின்றன. 1950-ல் நாட்டிற்குரிய தந்தித்தொழில் அலுவலகம், கட்டணம் செலுத் தப்பட்ட 190,000,000 தந்தி விஷயங்களை கையாண்டிருக்கிறது. கடலுக்குள் செல்லும் கம்பித்தந்தி, ஒலிபரப்பின் மூலம் தந்தி, ஒலிபரப்பின்மூலம் டெலிபோன் முதலானதுகள் அமெரிக்கா விற்கும் இதர நாடுகளுக்கும் துரிதமான செய்திகளை அனுப்ப வசதியளிப்பதாயிருந்தன.

இதைத்தவிற, இந்த ரேடியோ மூலம் டெலிபோன் செய்யும் வசதிகள் இப்பொழுது போலீஸ், நெருப்பு இலாக்கா, காட்டி லாக்கா, பெரிய சாலைகளைப் பாதுகாக்கும் நிர்வாகம், தொழில் இலாக்கா, பொதுப்பயன் அளிக்கும் ஸ்தாபனம், பூகர்ப்ப சாத்திர நிலையம், நகரசபை, இன்னும் அமெரிக்க நாட்டிலுள்ள பிழைப்பு, சொத்து முதலானதுகளையும் வியாபாரத் தொழிலையும் பாதுகாக்கும் இடங்களிலெல்லாம் உபயோகப்படுத்தப் படுகின்றன.

அமெரிக்க டெலிபோன் தந்திவசதிகள் மத்ய சர்க்காரின் ஒரு பிரிவான, மத்ய செய்திஸ்தாபன கமிஷனின் ஒழுங்கு முறை கட்டுப்பாட்டின் கீழ் சொந்த கம்பெனிகளினுல் இயங்கி வருகிறது. இந்தக் கமிஷன் ஒலிபரப்பு நிலையங்களுக்கும், இயக்குபவர்களுக்கும் அனுமதி வழங்குகிறது. மேலும் ஒலி பரப்பு நிகழ்ச்சிகளை குறிப்பிடுவதும், நேரான இலக்கியங்களையும் தருவிக்கிறது. பெரும்பாலும், ஒலிபரப்பு, டெலிவிஷன் (தூரத்துப் பொருள்களை மின்சார அலையினுல் பார்ப்பது) போன்றவைகள் பொது மக்களுக்கு, முழுவதும் சொந்த கம்பெனிகளினுல் நடத்தப்பட்டு, விளம்பரவரியினுல் ஆதரவளிக்கப்பட்டு வருகின்றன.

1951, மே மாதத்தில் **4,000**-க்கு மேற்பட்ட ஒலிபரப்பு நிலையங்களும் **109** டெலிவிஷன்களும் இருந்தன. இதைத்தவிற **180,000** ஒலிபரப்பில்லாத நிலையங்கள் பொது நலனுக்காக சேவை செய்கின்றன. அமெரிக்காவில் **665,191** அனுமதி பெற்ற ஒலிபரப்பியாளர்களிருக்கிறுர்கள்.

அமெரிக்காவில் சுமார் **1,700** செய்தித்தாள்கள், **8,386** விரும்பக்கூடிய வாரப்பத்திரிகைகள், **6,500** சஞ்சிகைகள் எல்லாம் சொந்தமாக நிர்வகிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

மின்சாரசக்தி

அமெரிக்காவில் சென்ற **40** வருட காலங்களில், ஒவ்வொரு பத்து வருடத்திற்கும் இரண்டு பங்காக மின்சார சக்தியின் உற்பத்தியும் செலவும் ஆகியிருக்கிறது.

இதே மாதிரியான உற்பத்திப்பெருக்கம் நீடித்திருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. **1960**-ல், இம்மாதிரியாகவே உற்பத்திப் பெருக்கம் இருக்குமாயின் இன்னும் இரண்டு பங்கு மின்சார சக்தி அதிகமாகிவிடும்.

மொத்த மின்சார சக்தி, வெளிச்சம், உஷ்ணம் இவைகளுக்காக வருடத்தில் **410,000,000,000** கிலோவாட் உற்பத்தி செய்து ஜீரணிக்கப்படுகிறது. சுமார் **26** சத விகிதம் தண்ணீர் சக்தியினுலும் மிகுதியான **74** சதவிகித மின்சாரசக்தி, எரிபொருள், நிலக்கரி, காற்று இவைகளினுலும் உண்டாக்கப்படுகின்றது.

இந்த மொத்தத்தில் **81** சதவிகிதம் தனிப்பட்ட உபயோகமான கம்பெனிகளாலும், அமெரிக்க அரசாங்க இயந்திர சக்தியினுல் **12** சத விகிதமும், நகரத்திற்கு சொந்தமான தொழிற்சாலை இயந்திர சக்தியினுலும், கூட்டுறவு திட்ட ஏற்பாட்டினுல் **7** சதவிகிதமுமாக உள்ளன. இதைத்தவிற, தொழிற்ஸ்தாபன கம்பெனிகள் அவர்களுடைய சொந்த உபயோகத்திற்கான மின்சாரசக்தியை தாமாகவே உண்டு செய்து கொள்கின்றன.

தேசீய அரசாங்க சீர்படுத்தித்தரும் இலாகாக்களினுல் கட்டப்பட்டிருக்கும் அணைகளில் உள்ள இயந்திரங்களினுல் ஏராளமான தண்ணீர் சக்தி உண்டு செய்யப்பட்டிருக்கின்றன. நாட்டின் அநேக பாகங்களில் நீர்ப்பாசனம், வெள்ளப் பெருக்கை தடுத்து அதனின்று திரட்டப்படும் சக்தி, இன்னும் பலதரப்

பட்ட திட்டங்களினுல் ஏராள் தண்ணீர் சக்தி உண்டு செய்யப் படுகிறது.

மின்சார சக்தியை, பெரிய தொழிற்சாலேகள் 56 சதவிகித மும் நகரத்துக்குடிகள் 20 சதவிகிதமும், வியாபார ஸ்தாபனங் களும் சிறிய தொழில் நிலேயங்களும் 17 சத விகிதமும், விவ சாயக்குடிகளும் இன்னும் மிகுதியானவர்கள் 7 சத விகிதமும் உபயோகிக்கிருர்கள்.

அமெரிக்கக் குடும்பங்களில் 95 சத விகிதத்திற்கு மேற்பட்ட வீடுகளில் மின்சார வெளிச்சமும், மின்சார சக்தியுமிருக்கிறது. 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட அமெரிக்கப் பண்ணேவீடுகளில் மின்சார வசதிகள் இருக்கின்றன. 1940-ம் வருடத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் அப்பொழுது 35 சதவிகிதம் தானிருந்தது. அமெரிக்க விவசாயிக்கு ஒரு "கிலோவாட்" மின்சார சக்தி மூன்று சதங்களுக்கும் குறைவாகக் கிடைக்கிறது. அது 1,000 காலன்கள் தண்ணீரை இரைப்பதற்கும், 30 மாடுகளின் பாலேக் கறப்பதற்கும், 200 "புஷல்"கள் (எட்டு காலன் அளவுள்ள) தானியங்களே அறைப்பதற்கும் 10 காலன் பாலே குளிர வைப்ப தற்கும் உதவுகிறது.

போக்குவரத்து சாதனங்கள்

அமெரிக்காவில் அதிகமாக வழக்கத்திலிருந்துவரும் போக்கு வரவு, தனிப்பட்ட முறையில் சொந்தமாக உள்ள மோட்டார் வண்டிகள்தான். அமெரிக்காவில் ஒவ்வொரு மூன்றுவது மனிதனுக்கும் ஒரு மோட்டார் உண்டியிருக்கிறது. சராசரி வருடத்தில் ஒவ்வொரு மோட்டாரும் 10,000 மைல்கள் பிரயா ணம் செய்கின்றன.

அநேகமாக ஒவ்வொரு பட்டிணங்களேயும் கிராமங்களேயும் அடைவதற்கு மோட்டார் பஸ் வண்டியினுல் முடியும். 3,000 பெரிய மோட்டார் வண்டி சேவை, ஒரு பட்டிணத்திலிருந்து இன்னெரு பட்டினத்திற்கும் அல்லது பல பட்டிணங்களேயும் சேர்க்கின்றன. 1949-ல் பிரயாணிகளின் மோட்டார் வண்டி 21,151,000,000 மைல்கள் பிரயாணம் செய்திருக்கின்றன.

அதிகமான பாரச்சரக்குகளே ஏற்றி அனுப்புவதற்கு மோட்டார் டிரக்குகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. 1949-ல் இம் மோட்டார் டிரக்குகள் 93,653,000,000 டன்களே சுமந்து அவ்வளவு மைல்கள் போயிருக்கின்றன.

தனிப்பட்ட நாடுகள், அதன் எல்லேக்குள்ளிருக்கும் பிர தான ரஸ்தாக்களே பழுது பார்த்தும் செப்பனிடவும் செய் கின்றன. இந்த வேலேகளுக்கு மத்ய அரசாங்கத்திலிருந்து நிதி உதவியும் அடைகின்றன. நாட்டின், பெட்ரோலேப் போன்ற எண்ணேயினின்றும் கிடைக்கும் வரிகள், வண்டிகள் பதிவு செய்யப்படும் கட்டணங்கள், இன்னும் பொதுவான வரிகள், ராஜபாட்டைகளே செப்பனிட்டுப் பழுதுபார்ப்பதற்கு உதவியாக இருக்கிறது. 1949-ல் இருப்புப்பாதைகள் 35,718,000,000 மைல்கள் பிரயாணிகளேச் சுமந்துகொண்டும், 534,448,000,000

டன்கள் பாரமேற்றிக்கொண்டும், தபால் வண்டி, விரைவாகச் செல்லும் வண்டிகளை இழுத்துக்கொண்டும் சென்றன.

எந்த ஏற்றுமதியாளரும் அமெரிக்காவின் எந்த பாகத்திலும் ஒரு பாரத்தை ஏற்றி, அதை அந்நாட்டின் வேறு எந்த பாகத்திலும் எடுத்துக்கொள்ளமுடியும். அந்த பாரமேற்றிய வண்டி சில இருப்புப்பாதைகளின் வழியாக பிரயாணம் செய்யவேண்டும். ஆனால் ஒவ்வொரு இருப்புப்பாதையும் அந்த பாரமேற்றிய வண்டியை அதனுடைய குறிப்பிட்ட இடத்திற்குக் குறைந்த நேரத்தில் கொண்டுவர உதவியாக இருக்கிறது. எல்லா இருப்புப்பாதை வழிகளும் ஒரேவிதமான அகலமாக இருக்கிறது.

இந்த இருப்புப்பாதைகள், தனிப்பட்ட சொந்தக் கம்பெனிகளினால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் மத்ய அரசாங்கத்தின் ஒரு பிரிவான " உள்நாட்டு வியாபாரத்திற்குரிய கமிஷன் " அதனுடைய கட்டண விகிதங்களை ஒழுங்குபடுத்துகிறது.

இந்நாட்டிற்கு **1386**, ஆகாய விமானங்களை நாட்டிற்குள்ளும், வெளியிலுமாக இயக்கும் **60** ஆகாய மார்க்கங்களிருக்கின்றன. **1950**-ல் வருமானத்திற்குரிய **17,654,712** பிரயாணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர். விமானத்தின்மூலம் **222,948,244** டன்கள் பாரமேற்றிச் செல்லப்பட்டது. தபால்கள் ஏற்றிச் செல்லப்பட்டது **67,502,843** டன் மைல்கள். அமெரிக்காவில் **6,332** ஆகாய விமானக்கூடங்களிருக்கின்றன.

மத்ய அரசாங்கத்தின் ஒரு பிரிவான, உள்நாட்டு ஆகாய விமான நிர்வாகம், வியாபார முறையிலும், தனிப்பட்ட முறையிலும், **175** ஆகாயவிமானப்போக்குவரத்துக்கூடங்களை இயக்குகிறது. நகரங்களுக்குள் நிகழும் ஆகாய விமானப் போக்குவரவு **30** கட்டுபாட்டு மையங்களிலிருந்து பார்வையிடப்படுகிறது.

ஆகாய விமானக்கப்பல் செலுத்தும் கலைக்குதவியாக அமெரிக்க நாட்டினால் நிர்வகிக்கப்படும் **445** சீதோஷ்ண நிலை அறிவிக்கும் நிலையங்கள் இருக்கின்றன.

விவசாயம்

அமெரிக்க நாடுகளின் மொத்த விஸ்தீர்ணத்தில் அறு பது சதவிகிதம் விளைநிலமாக இருக்கிறது. மிகவும் முக்கிய மான அமெரிக்க விளைபொருள்களுள் கோதுமை, தானியம், பருத்தி, பழங்கள், புகையிலை முதலியன அதிகமாக இருக் கிறது. சாகுபடி மொத்த வருமானத்தில் பாதிக்கு மேல் ஆடுமாடு, அவைகளினின்றும் கிடைக்கக்கூடிய, அவைகளினுல் உண்டு செய்யப்படுகிற பொருள்களினுல் கிடைக்கிறது.

அமெரிக்காவில் சுமார் **6,000,000** பயிராகக்கூடிய குத்த கைக்கு விடக்கூடிய பண்ணை நிலங்கள் உள்ளன. ஒவ்வொரு விளைநிலமும் சராசரி **195** எக்கர்கள் விஸ்தீர்ணமுள்ளதாக இருக்கிறது.

சுமார் **403,000,000** எக்கர் நிலங்கள் அதாவது மொத்த நிலத்தில் **35** சதவிகிதம் பயிர்களின் விளைவுக்காக உபயோகப் படுத்தப்படுகின்றன. இப்பயிர்களின் விளைவுக்கான நிலமானது பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, நெதர்லாண்ட்ஸ், பெல்ஜியம் முதலியன ஒன்று சேர்ந்தால் எவ்வளவு விஸ்தீர்ணமிருக்குமோ அதற்கு சமமாக இருக்கிறது. அதாவது இந்தியாவும்' பாகிஸ் தானமும் ஒன்றுசேர்ந்த அளவில் சுமார் மூன்றில் ஒரு பாகமாகும்.

1948, 49 வருமானத்திற்குரிய வருடத்தில் அமெரிக்கா குறிப்பிடத்தக்கபடி, உள்நாட்டுத் தேவைகளை, யுத்தத்திற்கு முன்புள்ளதைவிட **10** சதவிகிதமதிகம் உபயோகப்படுத்திக் கொண்டது போக **21,905,000** டன்கள் உணவுப்பொருள்களை இதர நாடுகளுக்கு கப்பலேற்றி அனுப்பியது.

அமெரிக்க மொத்த ஜனத்தொகையில் பெரும்பாலும் ஐந்தில் ஒரு பாகம் விவசாயத்தினுல் ஜீவிக்கிருர்கள். பண்

ணையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சுமார் **10,760,000** நபர்களாவார்கள்.

பண்ணைத் தொழிலில் ஈடுபட்டவர்களில் **75** சதவிகிதத்திற் கும் மேற்பட்ட அதாவது **8,326,000** நபர்கள் சொந்தமாக பண்ணை வைத்துக்கொண்டும் தங்கள் குடும்பத்தலைவர்களாயு மிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் இப்பொழுது பயிரிடப்படும் ஏக்கர் விளைவு களில் **77** சதவிகிதம் கலப்பு ஜாதியைச் சேர்ந்த பலதரப்பட்ட பயிர்களின் தானியங்களினால் சிருஷ்டிக்கப்பட்டது.

விளைநில ஏக்கர் அளவில் மிகவும் உயர்தரமான பிரதேசம் மேற்கு மத்யபாகம். இங்கு **94** சதவிகிதம் கலப்பு தானியங்கள் பயிரிடப்படுகின்றன. வழக்கமாக கலப்பு தானியங்களை உப யோகப்படுத்துவதினால் **20** லிருந்து **25** சதவிகிதம் உற்பத்தியை அதிகப்படுத்துகிறது. தானிய விளைவு **1927–36**-ல் எட்டு காலன் அளவுகொண்ட **23** புஷல்கள் முதல் **1950**-ல் **38** புஷல்கள் வரை உயர்ந்தது.

கோதுமை விளைவு **1927–36**-ல் சராசரி **13.5** புஷல்களி லிருந்து **1950**-ல் **16** புஷல்களாக உயர்ந்திருக்கிறது.

சராசரி ஒரு ஏக்கருக்கு **180** பவுண்டுகள் வீதம் பயனளித்து வந்த பருத்தி விளைவு **1950**-ல் **270** பவுண்டுகளாக உயர்ந் திருக்கிறது.

விவசாயத்தொழில் உழைப்பும் அதன் உற்பத்தி அளவும் **1910**-லிருந்து **1949**-க்குள் இரண்டு மடங்காகியது.

1929-ல் **827,000** ஆகயிருந்த சாகுபடி எஞ்சின்கள் **1950** ஆரம்பத்தில் **3,825,000** ஆக உயர்ந்திருந்தது.

அமெரிக்க விவசாயிகளிடம் **1940**-லிருந்ததைவிட மூன்று மடங்கு இயந்திர தானிய சேகரிப்புகளும், நான்கு பங்கு

பால் கரக்கும் இயந்திர சாதனங்களும் 1950-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்தது.

1918-க்குப் பிறகு, முன்பு பண்ணைகளில் வேலை செய்த ஆடுமாடுகளுக்காக உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யப் பட்ட நிலங்களில் 65,000,000 ஏக்கர்கள் தானிய விளை விற்காக இயந்திர சாதனங்களினால் சீர்திருத்தப்பட்டது. இந்த நிலத்தின் விஸ்தீர்ணம் அமெரிக்க நாட்டின் விளை நிலப்பரப்பில் 16 சதவிகிதத்திற்கு சமமாக இருக்கிறது. இருந்த போதிலும் அமெரிக்க விவசாயிப்பண்ணைகளில் 7,500,000 குதிரைகளும் கோவேறிக்கழுதைகளுமுள்ளன.

அமெரிக்காவில் 1949-ல் ஒவ்வொரு, ஐந்து பண்ணையில் லாக் குடும்பங்களிலும் ஒரு காய்கறித்தோட்டம் இருந்ததாக "ஒரு மாதிரி மதிப்பிடும் அளவு" காட்டிற்று.

பனிரெண்டு விவசாயிகளாக இல்லாத குடும்பங்களில் ஒன்று அதனுடைய சொந்த கோழிக்குஞ்சு உற்பத்தியைப் பெருக் கிற்று.

காடுகளும் அதன் உற்பத்திகளும்

அமெரிக்காவில் மூன்றில் ஒரு பாகம் காட்டுப்பிரதேசமாக யிருக்கிறது. அதன் விஸ்தீர்ணம் 622,000,000 ஏக்கர்கள்.

மரங்களை வளர்ப்பதற்கும் வெட்டுவதற்கும், ஆடு மாடுகளை மேய்ப்பதற்கும், மேட்டு நிலத்தினால் மண் குவியல்கள் சாகுபடிக்குத் தடங்கலாக இல்லாமல் பார்த்துக்கொள்ளும் நிர்வாகத்திற்கும், நதிப்பிரிவினால் நீர் தேக்கத்தை தடுத்து தண்ணீர் சக்தியை சேதப்படாமல் சேமித்து வைப்பதற்கும், சாகுபடிக்கும், கப்பலை செலுத்தும் அபிவிருத்திக்கும், பொது மக்கள் பொழுது போக்குக்கும் காடுகள் உபயோகப்படுகின்றன.

தொழிலுக்குரிய காட்டு நிலங்களில் நான்கில் ஒரு பாகம் பொது மக்களால் சொந்தமாக்கிக் கொள்ளப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. 158,650,000 ஏக்கர்களைக் கொண்ட தேசீயக் காடுகளில் 35,650,000 ஏக்கர்கள் புல் வெளியாக இருக்கிறது. அமெரிக்க காட்டு இலாகா, இத் தேசீயக் காடுகளை நிர்வகித்து, மரங்கள் வளர்வதற்கான விஞ்ஞான முறையைப் புகுத்தியும், பிற கம்பெனிகள் அறுவடைப்பொருள்களைச் சேகரிப்பதையும் மேற்பார்வையிடுகிறது.

மத்திய சர்க்கார், இதற்கான முறையையும், தகவல்களையும் அரசாங்கத்திற்கும், காட்டு சொந்த சுவான்தார்களுக்கும் வழங்குகிறது. சர்க்கார் சம்பந்தமில்லா காட்டு நிலங்கள் அவசியமிருந்தால், காட்டு விளை பொருள்கள் உற்பத்தி செய்வதற்கு, எந்த சமயத்திலும், பழய உரிமையை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்கான முக்கியத்துவம் மத்திய சர்க்காருக்குண்டு.

அமெரிக்கக் காடுகளில் 1,100 விதவிதமான மர வகைகளிருக்கின்றன. இவைகளில் 100 வித மரங்கள் வியாபார உபயோகத்திற்கும், 29 வகைகள் அதிகமாக உபயோகப்படுத்தப்

படும் துண்டு மரங்கள், இலேசான உறுதியுள்ள ஒட்டுப் பலகை, மரக்கூழ் இவைகளுக்கும் உபயோகமாயிருக்கின்றன. இவை களில் டக்ளஸ்பர், தேவதாரு, ஓக், ஹெம்லாக் என்ற விஷ மரம், பிசின்மரம், நிழல் தரும் அழகான மேப்பிள் என்ற மரம், ஸ்புரூஸ், கல்லறைமீது நடப்படும் ஸைபிரஸ் என்ற மரம், சிவப்பு, முதலிய மரங்களும் இருக்கின்றன.

தென் பிரதேசமும், வாஷிங்டன், ஆர்கன், கலிபோர்னியா வைக்கொண்டுள்ள மேற்கு பிரதேசமும் மரங்களை வெட்டித் துண்டு போடும் தொழிலில் பிரசித்தி பெற்ற பிரதேசமாக இருக்கிறது. இருந்தபோதிலும் **48** ராஜ்யங்களில் **30** ராஜ்யங்கள் வியாபாரத்திற்குகந்த மர உற்பத்தியை உண்டு பண்ணுகின்றன.

அமெரிக்காவில் சுமார் **64,000** கம்பெனிகள் மரங்களைத் துண்டு போட்டும், அதற்குச் சமமான மரப் பொருள்களையும் உற்பத்தி செய்கிறது. காடுகள் உற்பத்திக்கும், உற்பத்திப் பொருள்கள் முன்னேற்றத்திற்கும், மரங்களைத் துண்டு செய்வ தற்கும், பேப்பர் செய்வதற்கும், மர வேலைகள் செய்வதற்கும் இன்னும் பூர்த்தியுள்ள வேலைகளை செய்து முடிப்பதற்கும் **1,000,000**க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தேவையாயிருக்கிறது.

சமீப காலத்தில் வருடம் ஒன்றுக்கு சுமார் **35,000,000,000** அடி, மரத் துண்டுகள் வெட்டி உண்டு செய்யப்படுகின்றன.

வ்ருடத்திற்கு **12,000,000** டன்கள் மரக்கூழ் உற்பத்தி செய் யப்படுகிறது. **1948**-ல் நாட்டின் எல்லாவிதமான உபயோகங்க ளுக்கும் **26,000,000** டன்கள் காகிதமும், காகித அட்டைகளும் உபயோகப்படுத்தப்பட்டது.

வருடத்திற்கு, செய்தி அச்சிடும் காகிதம் **1,000,000** டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

தேவதாரு மரக் காடுகள் ஒவ்வொரு வருடமும் **600,000** பீப்பாய்கள் கற்பூரத் தைலத்தையும் **2,000,000**-க்கு மேற்பட்ட பீப்பாய்கள் பிசின் குங்கிலியத்தையும் உற்பத்தி செய்து பல னளிக்கிறது.

சுரங்கப் பொருள்கள்

அமெரிக்க நாடுகளில், நிலக்கரி, இரும்பு உலோகத் தாதுப் பொருள், செம்பு, ஈயம், துத்தநாகம், வெண்மையான டங்ஸ்டன் உலோகம், பொன், பாதரசம் முதலானவைகள் சுரங்கத்திலிருந்து தோண்டியெடுக்கப் படுகின்றன. பூமியினின்றும் வெட்டியெடுக்கப்படும் அசுத்தமான மண்ணெண்ணெய், இயற்கை வாயுப் பொருள், அலுமினியம் கலந்த பாறை கந்தகம், சுண்ணும்பு, உப்பு, களி மண், ஒருவகையான மாக் கல், இன்னும் பல முக்கியமான சுரங்கப் பொருள்களும் இடைக்கின்றன.

இரும்பு உலோக தாதுப் பொருள்கள் **90,000,000** டன்களும், சுத்தமாக வெட்டியெடுக்கப்பட்ட செம்பு **800,000** டன்களும், **400,000** டன்கள் ஈயமும், **600,000** டன்கள் துத்தநாகமும் வருடாந்திர உற்பத்தியாக இருக்கிறது.

அமெரிக்க நிலக்கரி சுரங்கத்தார்கள் வருடத்தில் சுமார் **500,000,000** டன்கள் நிலக்கரியை உற்பத்தி செய்து தருகிறுர்கள். பூமியினின்றும் வெட்டியெடுக்கப்படும் நிலக்கீல் கரியில், **90** சத விகிதத்திற்கு மேல், இயந்திர வெட்டுங்கருவிகளால் வெட்டியெடுக்கப்படுகிறது. **50** சத விகிதத்திற்கு மேல் இயந்திர உதவியிஞல் பாரமேற்றியனுப்பப்படுகிறது. இந்த **48** ராஜ்யங்களில் பாதிக்கு மேல் நிலக்கரி வெட்டியெடுக்கப்படுகிறது.

1950-ல் அமெரிக்க நாடுகளில் **1,971,845,000** பீப்பாய்கள் "பெட்ரோலியம்" உற்பத்தி செய்யப்பட்டது. பெட்ரோலியம், மசகு எண்ணெய், எரிபொருள், மண்ணெண்ணே, காஸோலின், இவைகளே போன்ற பொருள்களே உற்பத்தி செய்வதும், சுத்தம் செய்வதும், விற்பனே செய்வதும், அமெரிக்கத் தொழில்களில் ஒன்ருகும். இதில் **1,000,000**-க்கும் மேற்பட்ட நபர்கள் வேலேயிலிருக்கிருர்கள்.

வியாபாரக் கப்பல்களும் அயல்நாட்டு வியாபாரமும்

1950-ம் ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க சுருசுருப்புள்ள வியாபாரக் கப்பல் தொகுதிகளுள் 14,550,000 டன்கள் சுமை தாங்கக் கூடிய 1,212 கப்பல்கள் இருந்தன. இத்துடன் 1939ல் இருந்ததை ஒப்பிட்டுப் பார்த்தால் 9,300,000 டன்கள் பார மேற்றக்கூடிய 1,091 கப்பல்கள் ஆக இருந்தன.

1950-ன் ஆரம்பத்தில் அமெரிக்கா, சலனமில்லாத அமைதி யான வியாபாரத்திற்குரிய, 20,835,000 டன்கள் பாரமேற்றக் கூடிய, 2,076 கப்பல்களை நிர்வகித்து வந்தது.

1950-ல் வியாபாரத்திற்குரிய, உற்பத்திப் பொருள்கள் 10,275,000,000 டாலர்கள் மதிப்பிடப்பட்டு ஏற்றுமதி செய்யப் பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு 8,842,000,000 டாலர்களாகும்.

1950-ல் அமெரிக்காவின் முக்கியமான ஏற்றுமதியாவன : இயந்திரங்களும் இயந்திரப்பகுதிகளும், பக்குவப்படாத பருத்தி, தானியங்களும் அதன் தயாரிப்புகளும், ரசாயன சம் பந்தமான பொருள்களும், மோட்டார் பாகங்கள், அதற்கு உபயோகமான பொருள்கள், நெசவு செய்யப்பட்ட பொருள்கள், பெட்ரோலியம், இரும்பு எஃகுகளினுல் செய்யப்பட்ட எந்திரம், புகையிலையும் அதனுல் செய்யப்பட்ட பொருள்களும், நிலக்கரி யும் அதன்சம்பந்தப்பட்ட பொருள்களுமாவன.

1950-ல் செய்யப்பட்ட அமெரிக்க ஏற்றுமதியில், 29 சத விகிதம் (இங்கிலாந்து உள்பட) ஐரோப்பிய நாடுகளுக்கும், 26 சத விகிதம் இதர அமெரிக்கக் குடியரசுகளுக்கும், 13.6 சத விகிதம் தூரக் கிழக்கத்திய நாடுகளுக்கும், 19.6 சத விகிதம்



வானத்தைத் துருவி ஆராயும் டெலஸ்கோப்புகளிலெல்லாம் மிகப் பெரியது கலிபோர்னியாவில் பாலோமர் மலை வானிலை ஆராய்ச்சிக்கூடத்தில் உள்ளதே.



அமெரிக்காவில் சிறிய நகரங்களில் தபால்காரர் தாம் தபால் கொண்டு போகும் வீடுகளிலெல்லாம் அன்பாக வரவேற்கப்படுபவர் ; அவ்வீடுகளில் உள்ளவர்கள் எல்லோருக்கும் தபால்காரரை நன்ருகத் தெரியும் ; அவர் பெயரை யாவரும் அறிவர்.

தூரத்தில் எங்கேயோ ஒரு பெரிய நகரத்தில் நடக்கும் இசை நாடகம் ஒன்றை “ டெலிவிஷன் ” கருவியால் கண்டும் கேட்டும் களிக்கின்றனர் சிலர். இக்கருவியுள்ள ஒரு வீட்டார் தமது நண்பர்களுடன் இருந்து இசை நாடகம் கண்டு மகிழ்கிருர்.

கனடாவிற்கும் 12 சத விகிதம் ஆப்பிரிக்காவிற்கும் அருகி லுள்ள கிழக்கு நாடுகளுக்கும் போயிற்று.

1950-ல் அமெரிக்காவின் முக்கிய இறக்குமதி :—காப்பி, ரசாயனக் கலப்பில்லா இரும்பு உலோகத்தாதுப் பொருள், உலோகங்களும், உலோகக் கலவைகளும், காகிதங்களும் காகி தத்தினுல் ஆக்கப்பட்ட பொருள்களும், பெட்ரோல் அதன் உற்பத்திகள், பக்குவம் செய்யப்படாத ரப்பர், பக்குவப்படாத கம்பளி, கரும்பு, இயந்திர அறுப்புப் பொருள்கள், பழங்கள், உண்ணக்கூடிய கொட்டைகள், தாவர எண்ணேகள், பிழிந் தெடுக்கப்பட்ட கொழுப்பு வகைகள், எண்ணே வித்துக்கள், உலோக தாதுப் பொருள்கள், வார்ப்பு இரும்பு, பண்படாத எஃகு, ரசாயனப் பொருள்கள், வளமுறச் செய்யும் பொருள் கள், கோகோ அல்லது கோகோ மரக் காய்கள், கிளிஞ்சலேப் போன்றுள்ள மீன்களுள்பட பலதரப்பட்ட மீன்கள், வைரம், மட்டரக வைரங்களாவன.

அமெரிக்காவினுள் நுழையும் இறக்குமதிகளில் சுமார் 60 சத விகிதம் சாதாரணமாக, வரிவிதிப்புகளின்றி வருகிறது. 1950-ன் அமெரிக்க இறக்குமதிகள், 32.9 சத விகிதம் அமெ ரிக்க இதர குடியரசினின்றும், 22.1 கனடாவிலிருந்தும் 15.7 சத விகிதம் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், 19.1 சத விகிதம் தூரக் கிழக்கு நாடுகளிலிருந்தும், சுமார் 10 சத விகிதம் ஆப்பிரிக்கா, அருகிலுள்ள கிழக்கு நாடுகளிலிருந்தும் கொண்டு வரப்பட்டன.

சரக்குகளின் மீது விதிக்கப்படும் சுங்க வரியைக் குறைப்ப தற்கும், உலக வியாபாரத்தை உற்சாகப்படுத்துவதற்காகவும் ஏற்பட்ட வியாபாரப் பரிவர்த்தனே ஒப்பந்தத் திட்டம் 1934-லில் அமுலுக்கு வந்தவுடன், அமெரிக்கா, தான் வியாபாரம் செய்து வந்த பெரிய தேசங்களுடன் வியாபாரப் பரிவர்த்தனே ஒப்பந் தத்தை தீர்மானமாகச் செய்துகொண்டது.

அரசாங்க வருமானம்

அமெரிக்க அரசாங்கத்திற்குரிய, வருட முடிவான 1950 ஜூன் 30-ல் அரசாங்கச் செலவு (மத்ய, சமஸ்தான உள்நாடு, உள்பட) 59,128,000,000 டாலர்களாகும்; அதாவது தேசத்தி லுள்ள ஒவ்வொரு ஆண் பெண் குழந்தைகளுக்கும் சராசரி 390 டாலர்கள் வீதம் ஆகியிருக்கிறது.

அரசாங்கத்தின் செலவாகும் தொகையில், 95 சத விகிதத் திற்கும் மேற்பட்ட வருமானம், வரிகளின் மூலம் வசூல் செய்யப்படுகிறது. 1951 அரசாங்கத்திற்குரிய வருடத்தில், பல தரப்பட்ட வருமானம் 50,076,000,000 டாலர்களும், வரியின் மூலம் வருமானம் 47,972,000,000 டாலர்களுமாகும். வரு மானத்தின் மீதுதான் வரிகள் விதிக்கப்படுகின்றன; இன்னும் சபை, சங்கங்கள்மீதும், உண்மையில் அரசியலில் பதவியுள்ளவர் களிடமும், வியாபாரத்திலும், அதாவது மோட்டார் சாமான்கள், ரோமங்கள், நகைகள், உடலழகை அதிகப்படுத்தும் வாசனைப் பொருள்கள், வேடிக்கையான பொழுதுபோக்கு இன்னும் இதர வகைகளின் மீதும் வரி விதிக்கப்படுகிறது. மிகுதியுள்ள 5 சத விகித வருமானம், சில்லரையாக வசூல் செய்யப்படுகிறது.

வசூல் செய்யப்பட்ட வரிகளில், கிட்டத்தட்ட பத்தில் ஏழு பாகம் மத்ய அரசாங்கத்திற்கு செலுத்தப்படுகின்றன. ராஜீய அரசாங்கம் ஆறில் ஒரு பாகத்திற்கும் கொஞ்சம் கூடுதலாகவும், உள் நாட்டு அரசாங்கம் ஏழில் ஒரு பாகத்திற்கு கொஞ்சம் குறைவாகவும் அடைகின்றன.

தனிப்பட்ட வருமான வரிகள், மத்ய அரசாங்க வருமான நிதிக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. அநேகமாக சிறிய வருமானமுடையவர்களைத் தவிர எல்லோரிடமும் வருமானவரி விதிக்கப்படுகிறது. உதாரணமாக, ஒருவர், அவரைச் சார்ந்த

சுயேச்சையாய் நிற்க முடியாத நபர்களில்லாத ஒருவர், ஒரு வருடத்தில் 600 டாலர்களுக்கு மேல் வருமானமுள்ள துகைக்கு வரி செலுத்துகிருர். அநேக சமஸ்தானங்களும் வருமான் வரியை திட்டம் செய்கிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் இரண்டாவது பெரிய வருமானம் வியாபாரம், தொழிற் ஸ்தாபனங்களின் வரியினுல் கிடைக்கிறது.

யுத்தம், இன்னும் இழந்ததை சிக்கனமான முறையில் திரும்பப் பெறுவ்தற்குமான அசாதாரண செலவுகளுக்கு அரசாங்கப் பத்திரங்களே விற்பதன் மூலமும், இன்னும் கடன் வாங்குவதன் மூலமும் ஈடு செய்யப்படுகிறது. 1912-ல் அமெரிக்க நாட்டு மக்களின் கடன், தலா 13 டாலர்கள் வீதம் கூடுதலாயிருந்தது. 1922-ல் அதே கடன் தலா 209 டாலர்கள் வீதம் உயர்ந்து விட்டது. 1949 அரசாங்கத்திற்குரிய வருடத்தில் இந்த கடன் தலா 1,694 டாலர்களாக உயர்ந்து விட்டது.

இந்தப் பெரிய மாறுதலுக்குக் காரணம் முக்கியமாக இரண்டு உள்ளன :—

(1) இரண்டாவது உலக யுத்தம் நடக்கும் பொழுதும் அதற்குப் பிறகும் அமெரிக்காவையும் இதர சுயேச்சையை விரும்பும் நாடுகளேயும் பாதுகாப்பதற்கு ஏற்பட்ட செலவு.

(2) இதர தேசங்களின் உதவிக்கும், பல நாடுகள் சம்பந்தப்பட்ட சமூக ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்ட செலவு.

இதே காரணங்கள்தான், மத்ய சர்க்காரின் தற்சமய உயர்தர சிலவுகளுக்கு, சமாதான காலத்தில்கூட அதே ரீதியை ஸ்தாபித்துவிட்டது.

தற்சமயம் பலதரப்பட்ட வகையான அயல்நாட்டின் உதவிக்கும், சௌகரியங்களும் மொத்தமாக 8,900,000,000 டாலர்கள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுதுள்ள அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில், உலக மஹா யுத்தம் இரண்டிலும் சேவை செய்த ராணுவத்தினருக்கும் அவர்களை சார்ந்தவர்களின் உதவிக்காகவும் நன்மைக்காகவும் 5,700,000,000 டாலர்கள் கணக்கிடப்பட்டிருக்கிறது. மிகுதியான ஒதுக்கப்பட்ட துகையில் 5,700,000,000 டாலர்கள் அரசாங்கக் கடன் வட்டிக்கும், 7,200,000,000 டாலர்கள் சமூக நல்ன், சுகாதாரம், வயதான காலத்தினர், உத்யோகம் தேடி தருதல், கல்வி, விவசாயம், இயற்கை சேமப்பொருள்களை காப்பாற்றுதல், போக்கு வரத்து, செய்தி ஸ்தாபனம் இன்னும் மத்ய அரசாங்கத்தின் நிர்வாகத்திற்கும் திட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

முக்கியமான நாட்குறிப்புகள்

1000 ஆண்டு : மஸ்ஸசூஸெட்ஸ் கடற்கரைப் பிரதேசத்தின் வெகு தூரத்திலிருக்கும், பலவிதமாக அறியப்படும் லேப்ரடார், புது இங்கிலாந்து கடற்கரை பிரதேசம், மர்த்தா திராட்சைத் தோட்டம் எனப்படும், திராட்சை நிலத்தை "லீப் எரிஸ்கன்ஸ் நோர்ஸ்மென்" அடைந்தார்.

1492, அக்டோபர் **12 :** கிரிஸ்டபர் கொலம்பஸ் அமெரிக்காவில் இறங்கினர்.

1607 : இப்பொழுது "வர்ஜீனியா" பிரதேசமாக இருக்கும் நாட்டிலுள்ள ஜேம்ஸ் டவுனில் "முதல் நிரந்தரமான ஆங்கிலேய உடன்படிக்கை நிலைநாட்டும் ஏற்பாடு" செய்யப்பட்டது.

1647 : மஸ்ஸசூஸெட்ஸ் பள்ளிக்கூடச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அமெரிக்காவின் இலவசப் பொதுக் கல்வித் திட்டம் அச்சட்டத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது.

1731 : பிலடல்பியா நூல் நிலைய சங்கம், அமெரிக்காவின் இலவச பொது நூல் நிலையத்தை ஆரம்பித்தது.

1752 : பெஞ்சமின் பிராங்லின், தன்னுடைய காற்றாடிப் பரிசோதனையைப் போன்றதுதான், மின்சார விளக்குகளின் வெளிச்சமும் என்று நிரூபணம் செய்து காட்டினர்.

1775 : அமெரிக்காவில் குடியேறினவர்களுக்கும் பிரிட்டிஷ் வீரர்களுக்கும் லெக்ஸிங்டனில் யுத்தம். இதற்கு ஒற்றுமையாக சுதந்திரத்திற்கான யுத்தம் ஏப்ரல் **19**-ல் ஆரம்பம்.

1776 ஜூலை **4 :** அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம், பிலடல்பியாவில் சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டது.

1783 செப்டம்பர் **3 :** கிரேட் பிரிட்டனும், அமெரிக்காவும் பாரிஸ் நகரத்தில், "அமெரிக்க சுதந்திரத்தை" ஒப்புக்கொள்

ளும் முறையில் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

1787 மே 14 : அமெரிக்காவின் ஆட்சி ஏற்பாட்டைத் திட்டம் செய்வதற்கு, சட்ட சபைக் கூட்டம் பிலடல்பியாவில் கூடிற்று.

1789 ஏப்ரல் 30 : ஜார்ஜ் வாஷிங்டன் முதல் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1791 டிஸம்பர் 15: முதல் பத்து சீர்திருத்தங்கள், உரிமை மசோதா, சட்டத்தில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன.

1794 : ஒழுங்கான தபால்முறை நிர்வாகத்திற்காக, காங்கிரஸ் முதல் சட்டத்தை நிறைவேற்றியது. (**1693**-ல் குடியேற்ற நாடுகளில் நிறுவப்பட்டது).

பருத்தி அருவடையில் அதிகமான உற்பத்தியை உண்டு செய்து, பருத்தி விதையைப் பிரித்தெடுக்கும் புரட்சியை உரிமையாக்கிக் கொண்டார் " எலிவிட்னே " என்பவர்.

1803: பிரான்ஸினிடமிருந்து லூவுஸியானு நிலப்பகுதியை வாங்கி அமெரிக்காவினுடன் ஐக்கியப்படுத்தப்பட்டது. மிஸிஸிபி நதியின் கட்டுப்பாடு அமெரிக்காவின் வசம் கிடைக்கப்பெற்றது. லூயி, கிளார்க், ஒரு நோக்கத்துடன் செய்யும் பிரதேச ஆராய்ச்சி பயணம் அமெரிக்காவின் வட மேற்கு பாகத்திலின்றும் ஆரம்பித்து நவம்பர் **15**-ல் பஸிபிக் கடற்கரையை அடைந்தது.

1807 : ராபர்ட் பல்டன் என்பவர் ஹட்ஸன் நதியில் நியூயார்க்கிலிருந்து ஆல்பனி வரையில், முதல் முதலாக நீராவிப் படகு உல்லாஸப் பயணத்தை செய்தார்.

1818: அமெரிக்க நாடுகளுக்கும் கனடாவிற்கும் நடுவில் **4,000** மைல்களுக்கு கோட்டையில்லா முன்னணி ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் கிரேட் பிரிட்டனும் ஒத்துழைக்க கையெழுத்திட்டனர்.

1819 : அமெரிக்க அரசாங்கம் ஸ்பெயின் தேசத்தவரிட மிருந்து "ப்ளாரிடா" தீபகற்பத்தை (இப்பொழுது ப்ளாரிடா நாடாக இருக்கும்) வாங்கிற்று.

1823 : காங்கிரசுக்கு தன்னுடைய வருடாந்திர செய்தி அனுப்புதலில் ஜனாதிபதி "ஜேம்ஸ் மன்ரோ", அமெரிக்க நாட்டில் இனி நிகழப் போகிற, ஐரோப்பிய நாட்டிலிருந்து குடியேறப்போகும் அமெரிக்கர்கள், கட்டுப் பட்டவர்களாகக் கருதப் படமாட்டார்கள் என நியதி முறையுடன் எடுத்துச் சொன்னார்.

1844 : "சேமுவேல் பின்லே ப்ரீஸ்" என்ற அமெரிக்க விஞ்ஞானியால் முதல் முதலாக "தந்தி"ச் செய்தி கண்டு பிடிக்கப்பட்டு "மோர்ஸ்" முறை, எனப்பெயரிடப்பட்டு "கடவுள் என்ன செய்தார்" என்ற வார்த்தைகள் வாஷிங்டனிலிருந்து பால்டிமோருக்கு மேமீ 24உ அனுப்பப்பட்டது.

1848 : கலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. இது அமெரிக்க நாட்டின் பஸிபிக் கடற்கரையோரத்தில், மேற்கு நாட்டினர் குடியேறுவதற்கும் குறிப்பிடத் தக்கதாக இருந்தது.

1860 : ஆப்ரஹாம் லிங்கன் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தெற்கு கரோலினா, அமெரிக்காவிலிருந்து விலகிக்கொண்டது. அதைத் தொடர்ந்து பத்து இதர, தென் பிரதேசங்களும் விலகிக்கொண்டன.

1861 ஏப்ரல் **10 :** வடக்கு தெற்கு பிரதேசங்களுக்குள் சண்டை. நான்கு வருடங்கள் இந்நாடு கொடிய போராட்டங்களுள் சிக்கி, அடிமைத்தனம், தனிப்பட்ட பிரதேசங்களின் உரிமை ஸ்தாபித்தலையும், மத்திய அரசாங்க உரிமை ஸ்தாபித்தலையும் பற்றிய பிரச்னையில் ஈடுபட்டிருந்தது.

1862 ஜனவரி **1—1863** முதல்: ஜனாதிபதி லிங்கன் சுதந்திரப்பிரகடனத்தை வெளியிட்டு அமெரிக்காவில் ஐக்கியப்பட்டுள்ள நாட்டின் சகலப் பிரஜைகளும் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டுவிட்டதாக அறிவித்தார்.

"நிலதானச் சட்டம்" அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு சமஸ்தானத்திலும் கல்லூரிகளுக்கும், விவசாயம், இயந்திரத் தொழிலுக்கும் நிலம் அளிக்கப்பட்டது.

1865 : உள்நாட்டுக் கலகம் ஐக்கியப்பட்ட நாடுகளின் சரணாகதியுடன் முடிவடைந்தது. அமெரிக்க ஐக்கிய யூனிய னுக்கு வெற்றி.

1867 : ரஷியாவினிடமிருந்து அலாஸ்கா பிரதேசம் வாங்கப்பட்டது.

1869 மே **10 :** ஆக்டன், உடாவில் நேர்த்தியானவும் உறுதி யானதாகவுமுள்ள இருப்புப்பாதை ஓட்டப்பட்டது. நாட் டின் குறுக்கே ஓடக்கூடிய இருப்புப் பாதை முடிவடைந்ததைக் குறிக்கிறது. "வையோமிங்" பிரதேசத்தில் டிஸம்பர்மீ 10உ பெண்களுக்கு ஓட்டுரிமையை நிறைவேற்றும் சட்டம் அமு லுக்குக் கொண்டு வரப்பட்டது.

1870 : அரசியல் ஏற்பாட்டுமுறை சட்டத்தின் ஊர்ஜிதப் படுத்தப்பட்ட பதினைந்தாவது திருத்தத்தில் முன்பு அடிமை களாயிருந்தவர்களுக்கு ஓட்டுரிமையையும், அதாவது அமெ ரிக்க நாட்டின் முன்பு ஏவல் புரியும் அடிமைகளாக இருந்து எந்த மதத்தினராகவோ, வர்ணத்தினராகவோ இருந்தாலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்களுடைய ஓட்டுரிமை மறுக்கவோ, சுருக்கப்படவோ முடியாது என்று கண்டிருக் கிறது.

1878 ஜனவரி **28 :** முதல் முதலாக வியாபாரத்திற்குரிய "டெலிபோன்" மாற்று முறை நியூஹேவனில் துவக்கப்பட்டது.

1881 : அமெரிக்கச் செஞ்சிலுவைச்சங்கம் (அமெரிக்க தேசீய செஞ்சிலுவைச்சங்கம்) கொலம்பியா ஜில்லாவில் நிறுவப்பட்டது.

1889 : முதல் " பான் அமெரிக்கக் கூட்டம் " வாஷிங்டனில் கூடிற்று. **21** அமெரிக்கக் குடியரசு நாடுகளின், பலதேச சம்பந்தப்பட்ட நாடுகளுடைய ஒற்றுமையும், இணைப்பும் அதிகமாக வளர அக்கூட்டம் அமைத்தது.

1898 டிஸம்பர் **10 :** ஸ்பெயினுக்கும், அமெரிக்காவுக்கும் நடந்த பத்து மாதச் சண்டை ஒரு சமாதான உடன்படிக்கையுடன் முடிந்தது. இச் சமாதானம் பாரீஸில் நடந்து கையொப்ப மிடப்பட்டது. இச்சமாதானப்படி ஸ்பெயின் க்யூபாவிலிருந்து விடுதலையடைந்து, க்யூபா குடியரசு நாடாக நிலைநாட்டப்பட்டது.

போர்டோரிகோ, கூவம், பிலிப்பைன் தீவுகள் முதலியன அமெரிக்காவுடன் ஒப்படைக்கப்பட்டது. **20,000,000** டாலர்களை மாற்றிக்கொண்டு ஸ்பெயின் இவைகளை அமெரிக்காவுக்குக் கொடுத்தது.

1903 : வட கரோலினாவில் " கிட்டிஹாக் " என்னுமிடத்தில் வில்பர் என்பவரும் ஆர்வில்லி ரைட் என்பவரும், முதல், வெற்றிகரமான மோட்டாரினால் ஓட்டப்பட்ட ஆகாய விமா னத்தில் பறந்தனர்.

1912 : அரிஸோனா பிரதேசம், அமெரிக்காவின் **48**-வது நாடாக சேர்க்கப்பட்டது.

1914 : நடு அமெரிக்காவில் கட்டப்பட்ட " பனாமா " கால்வாய் அட்லாண்டிக் பஸிபிக் கடற்கரையின் நடுவே கப்பல்கள் போக்கு வரத்துக்காக திறக்கப்பட்டது. இதனால் கப்பல்கள் தெற்கு அமெரிக்கக் கண்டத்தை சுற்றிக்கொண்டு வராமல் சுலபமாக போக முடிந்தது.

1917 எப்ரல் **6 ;** அமெரிக்கா, ஜெர்மனி மீது போர் தொடுத் தது. முதலாவது உலக யுத்தத்தில் புகுந்தது.

1918 நவம்பர் **11 :** நேச நாடுகளும் ஜெர்மனியும் தற் காலிகமான சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

1920 : அரசாங்க ஏற்பாடு ஆட்சி முறையின் பத்தொன்ப தாவது திருத்தம் பெண்களுக்கு ஓட்டுரிமையை ஊர்ஜிதப் படுத்தியது.

1927 : சார்லஸ் ஏ. லிண்ட்பர்க் என்பவர், நியூயார்க்கி லிருந்து பாரீஸுக்கு அட்லாண்டிக்கைக் கடந்து முதல் முதலாக தனியாகப் பறந்தார்.

1933 : அமெரிக்க அரசாங்கம், வேலையில்லாதவர்களுக்கு வேலையும், விளை பயிர்களின் விலையை உயர்த்தவும், பணம் கொடுத்து வாங்கும் ஸ்தாபனத்தை நிலைநாட்டவும், தொடர்ந்து அமெரிக்க சரித்திரத்திலேயே பொருளாதார நெருக்கம் ஏற் படாமலிருக்கவும் ஒரு திட்டத்தை வகுத்தது.

ஜினீவா கூட்டத்திற்கு, அமெரிக்க நாடு, தாக்குதலுக்குரிய ஆயுதங்களை முழுவதும் கழித்துவிட திட்டம் கொணர்ந்தது. ஜெர்மனி ஆயுதபாணிகளாகவேயிருக்க வற்புறுத்தியதால், அக் கூட்டத்திலிருந்து வாபஸ் வாங்கிக்கொள்ள நேரிட்டது.

1934 : பரஸ்பர வியாபார ஒப்பந்தத் திட்டம், காங்கிரஸினால் ஆமோதிக்கப்பட்டு, இறக்குமதி சரக்குகளுக்கு சுங்க வரிகளைக் குறைக்கவும் உலக வியாபாரத்தை பரஸ்பரம் மாற்றிக்கொண்டு அதிகப்படுத்தவும், ஜனாதிபதிக்கு அதிகார உரிமை கொடுத்தது.

1935 : அமெரிக்க காங்கிரஸ், சமூகப் பாதுகாப்பு விதியை அமுலுக்குக் கொண்டு வந்தது. அது, வயதானவர்கள், வேலையில்லாதவர்களுக்கு பாதுகாப்பு, வீடில்லாக் குழந்தைகள், பொட்டை, கர்ப்பஸ்திரீகள், குழந்தைகள் பாதுகாப்புக்குமான வசதிகளை அளிக்கக்கூடியதாக இருந்தது.

ஜெர்மனியுடனும் இத்தாலியுடனும் சண்டை போட்டுக் கொண்டிருந்த நேச நாடுகளுக்கு உதவி செய்யக்கூடிய அள வுக்கு, அமெரிக்க அரசாங்கம் ஒத்துழைக்க, "குத்தகைக் கடன் உடன்படிக்கையில்" தலைவர் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் கை யெழுத்திட்டார்.

உலகத்திற்கே புதுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட பேச்சு சுதந்திரம், மதசம்பந்த சுதந்திரம், பயத்தினின்றும், வறுமையினின்றும் விடுதலை இவைகளை முற்போக்கு நோக்கத்துடன் அமெரிக்க நாடுகள் எதிர் பார்ப்பதாக ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சொன்னார். அவர் தேசீயக்கொள்கை என்ன என்பதைப் பற்றி தீர்மானமாகக் கூறுகையில் " மன உறுதியுள்ள ஜனங்களின், தாக்குதல் ஆக்கிரமித்தல் இவைகளை எதிர்த்துத் தடை எங்கு நடந்தாலும் அதற்கு முழு ஆதரவு அளிக்கும் " எனக் கூறுகிறார்.

டிஸம்பர் 7 : பெர்ல் ஹார்பரில் குண்டு வீசிய பிறகு அமெரிக்கா இரண்டாவது உலக யுத்தத்தில் ஈடுபடுகிறது.

1942 : அமெரிக்காவும் இன்னும் இதர 25 நாடுகளும், யுத்தத்தில் முழு ராணுவ உதவியும், பொருளாதாரத் துறையில் முன்னேற்றமும் உபயோகித்துக் கொள்ள, ஐக்கிய நாடுகள் என, ஒரு பிரதிக்ஞையில் அட்லாண்டிக் உடன்படிக்கையுடன் கையெழுத்திட்டு தன் சம்மதத்தை வெளியிட்டது. தனிப்பட்ட முறையில் எந்தவித தற்காலிக சமாதானமோ உடன்படிக்கையோ செய்து கொள்ளுவதில்லை எனவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளன. ஜனவரி 1 : வாஷிங்டனில் இந்த அறிக்கை கையெழுத்திடப்பட்டது.

1944 ஜூன் 6 : அமெரிக்க, பிரிட்டிஷ், கனடாத் துருப்புகள் பிரான்ஸில் இறங்கியது.

1945 ஏப்ரல் 25-லிருந்து ஜூன் 26 வரை : ஐக்கிய நாடுகள் ஆலோசனைக் கூட்டத்தில் திட்டக் குறிப்புகளுடன் ஏற்பட்ட ஐக்கியப் பத்திரம், பலதரப்பட்ட இணைப்பு நாடுகளின் சமூக சம்பந்தத்தின்மேல் சேன்பிரான்ஸிஸ்கோவில், அமெரிக்கா இன்னும் 49 இதர நாடுகளினால் கையெழுத்திடப்பட்டது.

ஐரோப்பாவில் சண்டைகள் முடிந்தன. மேமீ 7உ : ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடைந்தது. ஜப்பான் நிபந்தனையின்றி ஆகஸ்ட் 14உ சரணடைந்தது.

1946 : ஜூலை 4-ல் அமெரிக்க காங்கிரஸினால் இயற்றப் பட்ட சட்டங்களால் பிலிப்பைன் தீவுகள் சுதந்திரமடைகிறது.

1947 : பிரேஸிலிலுள்ள பெட்ரோபோலிஸில், அமெரிக் காவையும் உட்கொண்ட **21** அமெரிக்கக் குடியரசுகள், உள் நாட்டு அமெரிக்க ஒப்பந்த பரஸ்பர உதவிக்கான பத்திரத்தில் ஆமோதித்து கையெழுத்திட்டன. இத்திட்டம் பயமுறுத்தும் ஆக்ரமிப்பு, ஆயுதத் தாக்குதல் இவைகளை பரஸ்பர முறையில் உதவி செய்ய அமைக்கப்பட்டிருக்கிறது.

1948 : மார்ஷல் திட்டத்தில், இதர கடல் கடந்த நாடு களின் முதல் வருட, பொருளாதார முன்னேற்றத்திற்காக **6,000,000,000** டாலர்கள் செலவழிக்க ஜனாதிபதி ட்ரூமன் கையெழுத்திட்டார்.

அமெரிக்காவின் 9-வது பலதரப்பட்ட நாடுகளின் கூட்டம் பொகோடா, கொலம்பியாவில் கூடி, அமெரிக்க ஸ்தாபனம் நிரந்தரமான சட்டப்படி அதிகாரபூர்வத்துடன் என்றும் **21** நாடுகளைக் கொண்ட இணைப்பு சங்கத்தாபனத்தை தலைமை யாகக் கொண்டது என்று ஒரு உரிமைப் பத்திரம் உண்டு செய்தது.

ஸோவியத், பெர்லினைத்தாக்கி துருப்புகளுடன், உட்புக முடியாமல் இருந்ததை தகர்த்தெறிய அமெரிக்காவும், கிரேட் பிரிட்டனும், நகரத்தின் பிரிக்கப்பட்ட மண்டலங்களுக்கு, நேச நாட்டின் கட்டுப்பாட்டின்கீழ் ஆகாய விமானங்களைக் கொடுத் துதவிற்று.

1949 : பெல்ஜியம், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஐஸ் லெண்டு, இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லண்ட்ஸ், நார்வே, இங்கிலாந்து, அமெரிக்கா, போர்ச்சுகல் நாடுகளின் பிரதிநிதிகள் பரஸ்பர எதிரித் தாக்குதலை சமாளிக்கவும், கையெழுத்திட்ட நாடுகள் ஏதேனும் தாக்கப்பட்டால் உதவிக்கும், வட அட் லாண்டிக் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

1950 : அமெரிக்க ஆயுதப்படை, ஒவ்வொரு நாட்டையும் அழைத்து குடியரசு நாடான கொரியாவை கம்யூனிஸ்ட் தாக்கு தலிலிருந்து எதிர்ப்பதற்கு பிரதியாக இருந்தது.